நம் வழி வேளாண்மை

பருவம் 23 ஜூலை – செப்டம்பர் 2014 இதழ் 2

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம்வழி வேளாண்மை

பருவம் 23 ஜூலை – செப்டம்பர் 2014 இதழ் 2

ஆசிரியர்

பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான் சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

மக்காச் சோள கதிர் சக்கையும் உத்தியும்

சிறு தொழிற்சாலைகளின் சொந்தகாரர்கள் அவ்வப்போது அங்கு வேலை பார்க்கும் பணியாளர்களிடம் நல்ல மதிப்பு வைப்பது இல்லை. ஏனெனில் சிலர் வேலையை நன்கு பழகிய பின் வேறு இடங்களுக்கு சென்று விடுகின்றனர். பணியாளர்களுடைய சுய முன்னேற்றேத்திற்கு தொழிற்சாலை உரிமையாளர்களும் உதவ முன் வருவது இல்லை.

ஒரு தொழிற்சாலையில் இயந்திரத்தின் உதிரி பாகங்கள் தயாரிக்கப்பட்டு வந்தன. ஒரு பிரிவில் உதிரி பாகத்தை ஆயில் டேங்கில் வைத்து வெட்டப்படும் ; பின்னர் இந்த வெட்டுண்ட பகுதி மற்றொரு பிரிவுக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு மணல் மூலம் எண்ணெய் உறிஞ்சப்படும். இவ்வாறு செய்யப்படும் போது மணல் உராய்வினால் உதிரி பாகத்தின் மேல் பகுதி சிறிது சேதாரப்படும் . இந்த பாதிப்பை போக்க என்ன வழி என்று தொழிற்சாலையின் நிறுவனர் தன்னுடைய நண்பரிடம் பேசிக் கொண்டிருந்தார். இதை அருகிலிருந்து ஒட்டு கேட்ட ஒரு பணியாளர் இதற்கு ஒரு மாற்று முறையை கண்டுபிடிக்க இயலும் என்று நினைத்து தானே முதலாலியிடம் சென்று இதற்கு விடை காண்கிறேன் என்றார். முதலில் முதலாளி தயக்கத்துடன் ‘‘உன்னால் முடியாது’’ என்று கூறி பின்னர் ‘‘நீ செய்து பார்’’ என்று கூறி விட்டார். பணியாளர் மணலுக்கு பதில் மக்காச்சோள கதிரை பயன்படுத்தி எண்ணெய் கரை நீக்கும் முறையை நடை முறைப்படுத்தி வெற்றி கண்டார்.

இந்த முயற்சி பாராட்டுக்குரியது. இந்த கருத்தை கூறும் திருக்குறள் பின்வருமாறு :

எப்பொருள் **யார் யார்** வாய்க்கேட்பினும் – அப்பொருள் மெய்பொருள் காண்ப தறிவு

நன்றி : தேனீ (ஜனவரி – மார்ச் – 2014)

மேட்டுப்பாளையம் ராஜரத்தினத்தின் நர்சரி, இயற்கை வேளாண்மை உத்திகள்

கோயம்புத்தூர் மாவட்டம் மேட்டுப்பாளைத்தில் திரு. ராஜரத்தினம் (45) வசித்து வருகிறார். இவர் கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைகழகத்தில் B.F.Tech படித்து வருகிறார். இவருக்கு 1 மகன் உள்ளார். இவருக்குச் சொந்தமாக 6 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் மல்லிகைப்பூ , முல்லை , அரளி , காக்கடான் , நோனி செடிகள் மற்றும் 200 வகையான அலங்கார செடிகள் வளர்த்து பராமரித்து வருகிறார்.

செடிகள் பராமரிக்கும் சமயம் பூச்சிகள் , காய் புழு தாக்குதல் அதிகமாவதைக் கண்ட இவர் தனது தந்தை திரு. சண்முக வேலாயுத சாமி, மேட்டுப்பாளையம் திரு நவநீதகிருஷ்ணன் போன்றோரிடம் இயற்கை பூச்சி விரட்டி , உரம் தயாரித்தல் பற்றி விளக்கம் கேட்டு தெரிந்து கொண்டுள்ளார். இவர் கடைபிடிக்கும் உத்திகள் பின் வருமாறு .

சாறு உறிஞ்சும் பூச்சிகளுக்கு

சாம்பல் 5 கிலோ வுடன் மஞ்சள் தூள் 1 கிலோ கலந்து தூவலாம் அல்லது சாம்பல் 2 கிலோவுடன் மஞ்சள் தூள் 1/2 கிலோ சேர்த்து 100 லிட்டர் நீரில் கலந்து ஸ்ப்ரே செய்யலாம். பச்சை மிளகாய் 2 கிலோவுடன் வெள்ளைப்பூண்டு 1/2 கிலோ, பெருங்காயம் 100 கிராம் சேர்த்து அரைத்து 100 லிட்டர் நீர் கலந்து தெளிக்க வேண்டும்.

பயிரைத் தாக்கும் புழுக்கள் , வண்டுகளுக்கு

1) எருக்கு , சிறியாநங்கை , பெரியா நங்கை , ஆடாதோடா, ஊமத்தை, சுண்டை , வேலிப்பருத்தி , வெட்டுக்காயத்தழை , பீ நாரிச் சங்கு, கும்மட்டிக்காய் , பொன்னரளி , மெட்ராஸ் மல்லி , சீமை ஆவாரை (Cassia alata) , சீத்தாப்பழ விதை , வேம்பு விதை இவற்றில் ஏதேனும் மூன்று நான்கு வகைகள் சேகரித்து , 100 லிட்டர் நீருக்கு 5 கிலோ எனும் அளவில் இடித்து ஊற வைக்க வேண்டும். தினமும் 2 முறை கலக்கிவிடவும் . 5 அல்லது 6 ம் நாள் வடிகட்டி தெளிக்கவும்.

2) சுண்டை , வேலிப்பருத்தி , வெட்டுக்காயத்தழை , பொன்னரளி மற்றும் எருக்கு ஆகியவற்றை 5 கிலோ அளவில் சேகரித்து , இடித்து 100 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும் . தினமும் 2 முறை கலக்கி விட வேண்டும். ஒரு வாரம் கழித்து தெளிக்கலாம்.

3)கருஊமத்தை 3 கிலோ , வெட்டுக்காயத்தழை 1 கிலோ , எருக்கு 3 கிலோ ஆகியவற்றை 10 கிலோ அளவில் சேகரித்து இடித்து , 200 லிட்டர் நீரில் 5 நாட்கள் ஊற வைத்து தெளிக்கலாம். தினமும் இரண்டு முறை கலக்கி விடவேண்டும்.

4) புங்க இலை , சுண்டத்தழை , பீநாரி இலை , பீயன்தழை ஆகியவற்றை 10 கிலோ என்ற அளவில் சேகரித்து இடித்து 200 லிட்டர் நீரில் ஊற வைக்கவேண்டும் . தினமும் இரண்டு முறை நன்றாகக் கலக்கிவிட வேண்டும் . 5– 10 நாட்கள் கழித்து தெளிக்கலாம்.

5) ஊமத்தங்காய் இலை 5 கிலோ , கும்மட்டிக்காய் 7 கிலோ வெட்டுக்காயத்தழை 3 கிலோ ஆகியவற்றை இடித்து 300 லிட்டர் தண்ணீரில் ஊற வைத்து 5 நாட்கள் கழித்து தெளிக்கலாம்.

6) பொன்னரளித்தழை (61/2கிலோ) , சோற்றுக்கற்றாழை (61/2 கிலோ) , சீத்தாப்பழ இலை மற்றும் காய் (2 கிலோ) ஆகியவற்றை 15 கிலோ என்ற அளவில் சேகரித்து , இவற்றுடன் வெல்லம் 5 கிலோ சேர்த்து , இடித்து , 300 லிட்டர் நீரில் ஊற வைக்க வேண்டும் . தினமும் இரண்டு முறை நன்றாகக் கலக்கி விடவேண்டும். 5 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும் .

7) இஞ்சி , தைல இலை கலந்து வைத்த அதே ப்ளாஸ்டிக் கேனில் காலி செய்து, கழுவாமல் , 5 லிட்டர் பால் ஊற்ற வேண்டும். இதனை கலக்கி 50 லிட்டர் தண்ணீர் கலந்து பயிருக்கு 5 நாட்கள் கழித்து தெளிக்கலாம்.

8) கும்மட்டிக்காய் 4 கிலோ , சுண்டைத்தழை 31/2 கிலோ, வேலிப்பருத்தி 21/2 கிலோ ஆகியவற்றை 10 கிலோ என்ற அளவில் சேகரித்து , இடித்து 200 லிட்டர் நீரில் ஊற வைக்கவேண்டும் . தினமும் இரண்டு முறை நன்றாகக் கலக்க விடவேண்டும். இத்துடன் சர்வோத்தயா பார் சோப் (2) (செதுக்கி , தூளாக) சேர்க்கப்பட்டு, தினமும் இரண்டு முறை நன்றாகக் கலக்கவேண்டும் . 5 நாட்கள் கழித்து வடிகட்டி, பயிர் நன்கு நனையும் வண்ணம் தெளிக்க வேண்டும் .

கத்தரியில் "சொறி" நோய்க்கு

யூகலிப்டஸ் இலை 2 கிலோ , பப்பாளி இலை 2 கிலோ , காகிதப்பூ இலை 2 கிலோ , சவுக்கு இலை 2 கிலோ, மஞ்சள் தூள் 1 கிலோ ஆகியவற்றை சேகரித்து 400 லிட்டர் நீரில் ஊற வைக்கவேண்டும் . 4 நாட்கள் கழித்து தெளிக்க வேண்டும் .

கத்தரி இலைகளில் மஞ்சள் நிறப் பூச்சிகள் தென்பட்டால்

அரளிக்காய் 2 கிலோ , சுண்டக்காயும் வேப்பங்காயும் 31/2 கிலோ , வெட்டுக்காயத்தழை 2 கிலோ, சுண்டத்தழை 21/2 கிலோ ஆகியவற்றை சேகரித்து இடித்து 400 லிட்டர் நீரில் ஊற வைக்கவேண்டும் . 5 நாட்கள் கழித்து செடிகள் நனையும் வண்ணம் தெளிக்க வேண்டும் .

இயற்கை உரம் தயாரித்தல்

வேப்பம்புண்ணாக்கு – 20 கிலோ , கடலைப்புண்ணாக்கு – 10 கிலோ, சாம்பல் – 10 கிலோ , சாணம் – 20 கிலோ ஆகியவற்றை 400 லிட்டர் நீரில் கலக்கப்பட்டது. தினமும் நன்றாகக் கலக்கிவிடப்பட்டது. 5 நாட்கள் கழித்து ஒரு செடிக்கு 1/2 லிட்டர் வீதம் ஊற்ற வேண்டும் .

பூச்செடி தண்டு வெட்டும் கருவி

2011ம் ஆண்டு மேட்டுப்பாளையத்தில் உள்ள ஒரு நர்சரியில் வேலையாட்கள் செடிகளின் தண்டுகளை கையாலே வெட்டுவதையும்வேலை ஆட்கள் அதிகமாவதும், ஒரு நாளில் 1000 தண்டுகள் மட்டுமே வெட்ட முடிவதையும் பார்த்த இவர் இதற்கு ஒரு இயந்திரம் வடிவமைப் பற்றி தனது நண்பர் திரு பாண்டியராஜனிடம் ஆலோசனை கேட்டார். திரு. பாண்டியராஜன் செந்தமாக லேத் ஒர்க்ஸ் கோயமுத்தூரில் நடத்தி வருகிறார். இவருடைய உதவியுடன் தண்டு வெட்டும் கருவி வடிவமைக்கப்பட்டது.

கருவியின் முக்கிய பாகங்கள் : சர்ஜிகல் பிளேடு – 2 சைஸ் 10 x 5 cm , பெல்ட் – 1, மோட்டார் – 5 ஹெச்பி – 1, ஆங்கிள் – 2 , ஸ்டேண்டு–4

கருவி வேலை செய்யும் விதம் : முதலில் மின்சாரத்தை இயக்கியவுடன் மெயினில் உள்ள இரண்டு ஆங்கிள்கள் மேலும் கீழுமாக வரும். அச்சமயம் பிளேடுக்கு நேராக செடியின் தண்டுப் பகுதியை வைக்கும் போது பிளேடின் மூலம் தண்டு வெட்டப்படுகிறது.

கருவியின் சிறப்பு பண்புகள் : வேலையாட்கள் கொண்டு வெட்டினால் ஒரு மணி நேரத்திற்கு 130 – 150 தண்டுகள் மட்டுமே வெட்ட முடியும். வேலையாட்கள் மெஷின் மூலம் 8 போர் தேவைப்படும். வெட்டினால் ஒரு மணி நேரத்திற்கு 1800 தண்டுகள் வெட்டமுடியும். வேலையாள் ஒருவர் மட்டுமே போதுமானது. 8 பேர் சேர்ந்து வேலை செய்தால் கூலியாக ரூ. 170 ஒரு நபருக்கு கொடுக்க வேண்டும். 8 பேருக்கு ரூ . 1360 ஒரு நாளைக்கு கொடுக்க வேண்டும். ஆனால் இந்த இயந்திரத்தின் மூலம் வெட்டினால் ரூ. 170 மட்டும் கொடுத்து கூலியை குறைத்தும் கொள்ளலாம். இதனால் ஒரு நாளைக்கு ரூ. 1190 மீதப்படுத்தலாம். இந்த இயந்திரத்தின் மொத்த விலை ரூ. 50,000 ஆகும்.

ஆரோக்கியம் தரும் நோனி பழ சாறு

திரு. ராஜரத்தினத்தினம் சுமார் 250 நோனி செடிகளை பயிரிட்டு இயற்கை முறையில் சாகுபடி செய்து வருகிறார். காய்ப்பு வந்தவுடன் பழங்களை பறித்து சாறு எடுத்து அருகிலுள்ள விவசாயிகளுக்கு நோய் தீர்க்கும் மருந்தாக இலவசமாகக் கொடுத்து உதவி வருகிறார். இந்த நோனி பழச்சாறு சாப்பிட்டால் தலைவலி , காய்ச்சல் , மூட்டுவலி , மஞ்சள் காமாலை , இரத்த அழுத்தம் , சக்கரை நோய் குணமாகும் . காலை , மாலை இரண்டு வேளைக்கு சுமார் 10 மி.லி அளவு சாப்பிட்டால் உடல் ஆரோக்கியமாக திகழும் என்று கூறுகிறார். இச்செடிகளை 3 வருடத்திற்கு முன்னர் கோயம்புத்தூர் வேளாண்மை பல்கலைகழகத்தில் கண்காட்சிக்காக வைக்கப்பட்ட ஒரு செடியை மட்டும் வாங்கி வந்து வளர்த்தும் பார்த்ததில் நல்ல மகசூலும் கிடைத்தது. இதனை வைத்து பெருக்கி தற்பொழுது 250 செடிகள் வைத்துள்ளார். இவர் சுத்தமான இயற்கை நோனி பழ சாறு தயாரித்து கொடுக்க உள்ளார். 400 மி . லி பாட்டில் விலை ரூ. 500 ; 800 மி . லி பாட்டில் விலை ரூ. 1000 . நோனி பழச்சாறு தேவைப்படுவோர் இவரை அனுகலாம்.

திரு. ராஜரத்தினம் ,
ஈடன் நர்சரி கார்டன் ,23/15 , கருப்பாயம்மாள் தோட்டம்,
வெள்ளிபாளையம் ரோடு ,
மேட்டுப்பாளையம் – 641 301 ,
கோயம்புத்தூர் மாவட்டம் ,
செல் : 9486094670 , 9486094660

ஏனாதி சேதுவின் கால்நடை வைத்தியம்

புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமாராவதி அருகில் உள்ள ஏனாதி கிராமத்தில் வாழ்ந்து வரும் திரு சேது (50) கட்டிடத் தொழிலாளியாக வேலை செய்கின்றார்.இவர் மூன்றாம் வகுப்பு வரை படித்து விட்டு வீட்டின் சூழ்நிலை காரணமாக தன் அப்பாவுடன் சேர்ந்து விவசாயத்தில் ஈடுபட்டு வந்துள்ளார். பிறகு 20 வயதுக்கு மேல் கூலி தொழிலாளியாக வேலை செய்து வந்தார். இவர் தனது பெற்றோர்கள் வைத்தியர்களிடமிருந்து கால்நடை மருத்துவத்தை சிறுவயதிலிருந்து கற்றுக் கொண்டு தற்போது அவருடைய கிராமத்தை சுற்றியுள்ள அனைத்து கிராமங்களுக்கும் சென்று கால்நடைகளுக்கு வைத்தியம் பார்க்கின்றார். இவர் கால்நடைகளுக்கு குறிப்பாக கீழ்கண்ட நோய்களுக்கு வைத்தியம் செய்கின்றார்.

குந்து நோய்க்கு

வாயில் , மூக்கில் நீர் வடியும். மாடு குன்னி நிற்கும். கருஞ்சீரகம் – 10 கிராம், வால்மிளகு – 10 கிராம் , வெள்ளை மிளகு – 10 கிராம் , சுக்கு – 10 கிராம் , பரங்கிபட்டை – 10 கிராம் , கடல்நுரை – 10 கிராம். இந்த கடை சரக்குகள் அனைத்தையும் நன்றாக அரைத்து உருண்டை செய்து மாட்டிற்கு கொடுத்தால் குந்து நோய் சரியாகி விடும். ஒரு நேரத்திற்கு மட்டும் கொடுக்கவும்.

விஷக்கடிக்கு

பெரியநங்கை – 1 கைப்பிடி , சிறியா நங்கை – 1 கைப்பிடி, அவரித்தலை – 1 கைப்பிடி , விஷக்கடிவேர் – 2 வேர் மட்டும் . விஷம் கடுமையான மாட்டுக்கு இவைகளை நன்றாக அரைத்து 1/2 மணி நேரத்திற்கு ஒவ்வொரு உருண்டையாக கொடுக்கவும். விஷம் ஏறாத மாட்டுக்கு 11/2 மணி நேரத்திற்கு ஒவ்வொரு உருண்டையாக கொடுக்கவும். விஷத்தை ஒரே நாளில் முறியடித்து விடும்.

மடிநோய்க்கு

2 எலுமிச்சை பழங்களை அறுத்து , 10 கிராம் ராணி குங்குமத்துடன் சேர்த்து இவ்வாறு மூன்று வேளை உள்ளே கொடுத்தால் மடிநோய் குணமாகிவிடும். சாக்பீஸ் அரைத்து வெளியே மடிபூரம் தடவ வேண்டும்.

வாய்காணைக்கு

வாய்காணை வந்த மாட்டுக்கு நல்ல சூடான கம்மங்கஞ்சியை ஒரு நாளைக்கு ஒரு நேரம் வீதம் 3–5 நாட்கள் கொடுக்க வேண்டும் .

சோர்வான/ தெளியாத மாட்டுக்கு

தோங்காய் – 4 , பனைங்கிழங்கு – 1 , பஞ்சாங்தழை – 1 கைப்பிடி , ஆனாந்தழை – 1 கைப்பிடி , வேப்பங்தழை – 2 கைப்பிடி அளவு . இவைகளை நன்றாக அரைத்து தண்ணீரில் கலந்து கொடுத்தால் மாடு இரண்டு நாட்களில் தெளிவாகி விடுகிறது. இரண்டு வேளை காலை மற்றும் மாலை கொடுத்தால் போதுமானது .

சேது
ஏனாதி கிராமம்
மேலச்சிவப்புரி அஞ்சல்
பொன்னமராவதி – 622 403
புதுக்கோட்டை மாவட்டம்
செல் ; 9943938512

சூரிய வழிபாடும் காயகல்ப மூலிகையும்

காலை மற்றும் மாலை வேலையில் சூரியனை வணங்கி வருவதால் வாழ்க்கையில் நமக்கு எல்லா ஐஸ்வரியங்களும் தந்து நம்மை காத்தருள்வதாக வைத்தியர் ஜாய் (76) கூறுகிறார். இவர் சுமார் 40 ஆண்டுகளுக்கு முன்பாக தனது குருவான சூரிய நாராயண சுவாமியிடமிருந்து சூரியனைப்பார்த்து வணங்கி வரும் முறையைக் கற்றுக் கொண்டார். இது தவிர மதுரை மாவட்டத்திலுள்ள டி.கிருஷ்ணாபுரம் அய்யாத்துரை கோனாரிடமிருந்து மூலிகை வைத்தியத்தைக் கற்றுக் கொண்டார். அய்யாத்துரை கோனார் உதவி மூலம் மகாலிங்க மலையிலுள்ள வண்டு கொல்லி மரம் போன்ற முக்கிய மூலிகை குணம் கொண்ட தாவரங்களை அறிந்து கொண்டார். இவரது கூற்றுப்படி சூரியதியானமும் காயகல்ப மூலிகையும் கொண்டு மனிதனுக்கு வரும்

எந்த நோயையும் குணப்படுத்தி விட முடியும் என உறுதியாகக் கூறுகிறார்.

சூரியனை வழிபடும் முறை

நித்தமும் காலையில் சுமார் 7 மணி அளவில் 10 – 20 நிடங்கள் சூரியனை தொடர்ந்து பார்த்து வர வேண்டும். ஆரம்பத்தில் சில நிமிடங்கள் பார்த்த பின் கால அளவைக்கூட்டிக் கொள்ளலாம்.நமது தந்தையிடம் விண்ணப்பிப்பது போல் சூரியனிடம் உதடுகளை அசைத்து நமது குறைகளைக் கூறி காப்பாற்றியருள வேண்டலாம். சூரிய வழிபாடு செய்பவர்கள் எந்த கெட்ட எண்ணங்களையோ,பொய்பேசுதல் போன்றவற்றி லிருந்து விலகி மனமும் செயலும் சுத்தமாகயிருக்க வேண்டும். புளிப்பான எதையும் சாப்பிடக்கூடாது. ஒரிடத்தில் 30 நபர்கள் சேர்ந்து 30 நாட்கள் தொடர்ந்து சூரியனை வணங்கி வந்தால் அந்த இடத்தில் சூரியன் அருள் கிடைப்பதைப்பார்க்கலாம்.

வைத்தியம் : தோல் நோய்களுக்கு தேங்காய் எண்ணெயில் பாலாமர இலைகளை வைத்து சூரியபுடம் போட்டு வெளிப்பூச்சாகத்தடவலாம். உள்ளே வண்டு கொல்லி மரப்பட்டை , சிறியாநங்கை , பெருங்குறிஞ்சாபட்டை , சிவனார் வேம்பு போன்றவற்றை தூள் செய்து உள் மருந்தாகக் கொடுக்க வேண்டும். வல்லாரை , அஸ்வகந்தா , வில்லம் , கூழைப்பூ, பிரண்டை , வால்மிளகு , அபீன் உப்பு போன்றவற்றுடன் தங்கம் தூள் சேர்த்து பஸ்பம் செய்து காயகல்பம் தயார் செய்கிறார். இதனை அணைத்து வகையான நோய்களுக்கும் கொடுத்தால் நிவாரணம் தரும் . இது தவிர மூலிகை காப்பி தயாரித்தல் (துளசி , ஆடாதொடை , செம்பரத்தை, நுனா, கொய்யா இலைக் கொழுந்து, இம்புறா, லெமன்கிராஸ், தவசி முருங்கை சேர்க்கலாம்) மூலிகைகசாயம் தயாரித்தல் (தழுதாழை, கலியாண முருங்கை இலை , செம்பருத்தி பூ , அகத்தி கீரை , அசோகப்பூ , முருங்கைபிசினுடன் கடைச்சரக்கு சேர்த்து காய்ச்சி வைத்துக் கொள்ளலாம்) போன்றவற்றின் மூலம் பல்வேறு நோய்களை குணப்படுத்துகிறார்.

எம். ஜே. ஜாய்,
நெல்லிக்குளி கிராமம் ,
கோத்து மங்கலம் தாலுகா ,
எர்ணாகுளம் மாவட்டம் ,
கேரளா,
செல் ; 9677151328

சாமியாத்தாளின் மூலிகை சேகரிப்பு பணி

ஈரோடு மாவட்டம் கணபதிபாளையத்தில் குடியிருக்கும் சாமியாத்தாள் (வயது 60) 5 வது வரை படித்து விட்டு மூலிகை செடிகளை தேவையானோருக்கு விநியோகித்து வருகிறார். இவரது மகன் தற்சமயம் பொக்குலின் இட்டாச்சி வைத்து நல்ல தொழில் செய்து வந்தாலும் சாமியாத்தாள் தனது மனம் நாட்டம் கொண்ட மூலிகைகளை சேகரித்து பலருக்கும் கொடுத்துதவி வரும் பணியை இந்த வயதிலும் உற்சாகத்துடன் செய்து வருகிறார். சிலருக்கு மூலிகைத் தோட்டம் உண்டாக்க தேவையான விதைகள் , மூலிகைச் செடிகளையும் கொடுத்து உதவியுள்ளார். நீலி போன்ற விதைகள் விரைவில் முளைக்க எரு , மாட்டுக்கோமியம் கலந்து தெளிப்பதைக் கூறுகிறார். இவரிடம் பலர் நீலி , கரிசலாங்கன்னி , செருப்படை , ஈஸ்வர மூலிகை, ஆடு தின்னாப்பாலை போன்ற செடிகளை அதிகளவில் கேட்பதாகக் கூறுகிறார். இவர் கேட்போருக்கு உடம்பு வலி நிவாரணக் கசாயம் தயார் செய்து கொடுக்கிறார்.

உடம்புவலி , மூட்டு வலி கசாயம்

விராலி, தழுதாழை, வேலிப்பருத்தி, பிரண்டை (நடுப்பகுதி) , முடக்கத்தான் , நொச்சி , ஆடுதின்னாப்பாலை , ஈஸ்வர மூலிகை போன்றவற்றை நீர் விட்டு காய வைத்து மூன்றில் ஒரு மடங்காக சுண்ட விட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இதிலிருந்து காலை, மாலை 50 மி.லி சாப்பிட்டு வர வேண்டும். மேற்கண்ட மூலிகைச் செடிகளை நீரில் கொதிக்க விட்டு சுடு நீரை ஒத்தடம் / குளிக்க பயன்படுத்தலாம்.

உணவில் புளி , துவரை , முட்டைக்கோசு , தட்டைப்பயறு போன்றவற்றை மேற்கண்ட வியாதிகளுக்கு தவிர்க்க வேண்டும்.

வெள்ளைப்படுதல்

பெண்களுக்கு வெள்ளைப்படுதலுக்கு ஓரிதழ் தாமரை , வெள்ளருகு , பற்படகம் அரைத்து ஆட்டுப்பாலில் அல்லது மோரில் 3 நாட்கள் சாப்பிட வேண்டும் .

எஸ். சாமியாத்தாள்
சின்னியம்பலத்தார் வீடு , மாரியம்மன் கோவில் தெரு
புஞ்சைக்காளை மங்கலம் கிராமம் , ஈரோடு மாவட்டம்
செல் ; 996569558

நீலகிரி முனுசாமியின் தேனீர் இலை (டீ) அறுவடை செய்யும் கருவி

நீலகிரி மாவட்டம் வெலிங்கடன் பஜாரில் திரு. முனுசாமி (54) வசித்து வருகிறார். இவர் பி.ஏ. வரை படித்துள்ளார். இவருக்கு 1 மகன் உள்ளார். இவருக்கு சொந்தமாக 7 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் 3 ஏக்கரில் தேயிலை பயிரிட்டு மகசூல் செய்து வருகிறார்.

ஆரம்ப கால தேயிலை அறுவடை

ஆரம்பத்தில் மக்கள் தன் கையாலே அறுவடை செய்து வந்தனர். அதாவது 1 செடியை அறுவடை செய்வதற்கு சுமார் 3 நிமிடம் எடுத்துக் கொள்வர். அவ்வாறு ஒரு நாளைக்கு சுமார் 25 – 30 கிலோ தேயிலை மட்டுமே அறுவடை செய்தனர். இதனால் பெரு விவசாயிகளுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அப்போது தான் 2006 ஆம் ஆண்டு ஒரு புதிய தேயிலை அறுவடை செய்யும் இயந்திரத்தை திரு. பொம்மராஜ் அவரின் உதவியுடன் சென்னையிலுள்ள பார்ம் எகிப்மெண்ட் நிறுவனத்தில் வாங்கி பயன்படுத்திப் பார்த்துள்ளார். இதனுடைய விலை ரூ. 1.41 லட்சம் . இவர் இந்த கருவியை மாற்றி அமைத்துள்ளார்.

கருவியை மாற்றி அமைத்தல்

புதிய இயந்திரத்தில் பிளேடானது அலுமினியத்தில் இருந்ததால் குறைந்தளவு எடையும் 1 வருடத்திலே உடைந்தும் போவதால் மேற்க் கொண்டு புதிய பிளேடு வாங்குவதென்றால் மறுபடியும் சென்னைக்கு சென்று வாங்கி வருவதால் அதிக செலவாகிறது. தற்சமயம் எங்களைப் பார்த்து கம்பெனிகாரர்களே ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பிளேடு போட்டு தருகின்றனர். இதில் மொத்தம் 10 நட்டுகள் இருப்பதால் பிளேடின் இயக்கம் அதிகமாவதாலும் எளிதில் உடைந்து விடுகிறது. 10 நட்டிற்கு பதிலாக திரட் போட்டு 3 நட்டு மட்டும் பயன்படுத்தலாம். ஏனென்றால் 1 நட்டின் விலை ரூ. 400 ஆவதால் அதிகமான செலவை தவர்க்கலாம்.

புதிய கருவியின் பாகங்கள்

ஸ்டீல் பிளேடு – நீளம் 900 செ.மீ , அகலம் 1.5 இஞ்ச் , நட்டு – 3 எண்ணம் , மோட்டார் இஞ்சின் – 5 ஹெச்பி , வைப்ரேட்டர் – 1 , கவர் பை – 1 (20 கிலோ தேயிலை கொள்ளளவு) , பெட்ரோல் டேங்க் – 1 , ஸ்டாட்டர் . கைபிடி.

இயங்கும் விதம்

முதலில் தானியங்கி ஸ்டாட்டரை கயரின் மூலம் இயக்கினால் மோட்டார் இயங்கி விடும். பின்னர் கவர் பையை இயங்கியவுடன் வைப்ரேட்டர் மூலம் பிளேடுக்கு சென்றவுடன் எளிதில் தேயிலையை பறித்து விடுகிறது. ஒரு சாலை (40 செடிகள்) பறிக்5 நிமிடமே ஆகிறது. இதிலிருந்து சுமார் 17 – 20 கிலோ வரை தேயிலை பறிக்கலாம்.

கருவியின் சிறப்பு அம்சங்கள்

ஒரு நாளைக்கு 1 ஆள் 25 கிலோ தேயிலை பறிக்கலாம் ஆனால் இந்த இயந்திரத்தின் மூலம் 5 நிமிடத்திலேயே 20 கிலோ தேயிலையை அறுவடை செய்யலாம். ஸ்டீல் பிளேடு நீளமாக (நீளம் 90 செ.மீ அகலம் 1.5 இஞ்ச்) இருப்பதால் ஒரு சாலை அறுவடை செய்ய எளிதாக உள்ளது. ஒரு மணி நேரத்திற்கு 1 லிட்டர் பெட்ரோல் மற்றும் 25 மி.லி ஆயிலே போதுமானது. இதனால் ஒரு நாளைக்கு 8 லிட்டர் பெட்ரோல் செலவாகிறது. 1 லிட்டர் ரூ. 86 x 8 = ரூ. 688 செலவாகிறது. 4 இந்த இயந்திரத்தால் ஒரு மணி நேரத்திற்கு 300 – 400 கிலோ தேயிலை பறிக்கலாம் . 8 மணி நேரத்திற்கு 8 x 400 = 3200 கிலோ (சராசரியாக 3 டன் தேயிலை 1 நாளைக்குள் பறிக்கலாம்) . இந்த இயந்திரத்தில் வேலை செய்ய 6 வேலையாட்கள் போதுமானது. ஏனென்றால் இயந்திரத்தின் மொத்த எடை 17 கிலோ உள்ளதால் 4 பேர் தூக்கிக் கொண்டு இயக்கலாம். மீதம் 2 பேர் அறுவடையான தேயிலையை அவரவர் பையில் நிரப்பலாம். இந்த இயந்திரத்தை பெண்களும் எளிதில் இயக்கலாம்.

முனுசாமி
த/பெ. முத்து
1/129 , பாலபவனம்
போகி தெரு , வெலிங்டன் பஜார்
நீலகிரி – 643232 , செல் ; 9443462285

பாலக்காடு தனபாலனின் கால்நடை மூலிகை வைத்தியம்

கேரளா மாநிலம் பாலக்காடு கடம்கோடு ஊரில் திரு தனபாலன் (43) வசித்து வருகிறார். இவர் எம்.ஏ.எம்.பில் படித்து விட்டு கேரளா மாநில அரசு கால்நடை பராமரிப்புத்துறையில் ஆய்வாளராக வேலை செய்து வருகிறார். இவர் கடந்த 17 வருடமாக பாரம்பரிய கால்நடை மூலிகை வைத்தியத்தை கடைபிடித்து நிபுணத்துவம் பெற்றுள்ளார். சில தொண்டு நிறுவனங்களுக்கு சென்று அங்குள்ள கிராம மக்களுக்கு பயிற்சியும் கொடுத்தும் வருகிறார். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருமாறு.

மடிநோய்க்கு

தேவையானவை : கரு ஊமத்தை காய் – 2

சீந்தில் இலை கொடி , நல்லெண்ணெய்

செய்முறை : ஊமத்தங்காய் நுனியை நறுக்கி விதை நீக்கி அதனுள் நல்லெண்ணெயை ஊற்றவும் . பின்பு காயின் நுனிப்பகுதியை மூடி சீந்தில் கொடி இலையை கொண்டு நுனி பகுதியை மூடி கட்டி விடவும். இக்காயை எடுத்து பாலில் போட்டு கொதிக்க வைக்கவும். நன்கு தெளித்த பின்னர் அரைத்து பசை போல் செய்து வைக்கவும் . பசையுடன் எலுமிச்சம் பழச்சாறை சேர்த்துக் கொள்ளவும். 2 கைபிடி அளவு வெந்தயத்தை எடுத்து 3 லிட்டர் தண்ணீரில் கலந்து கொதிக்க வைக்கவும்.

மாட்டின் மடியை நன்றாக குளிர்ந்த நீர் கொண்டு கழுவி விடவும், மாட்டு காம்பில் உள்ள பாலை கறந்து வெளியேற்றவும் . பின்னர் ஏற்கனவே செய்து வைத்துள்ள ஊமத்தம்காய் தைலத்தை மாட்டின் மடி மீது தடவி விடவும்.

குறிப்பு : இந்த தைலத்தை 24 மணி நேரத்திற்குள் பயன்படுத்தி விடவும்.

சினை பிடித்த மாட்டிற்கு வயிறு உப்பிசம், கால் வீக்கமாக இருந்தால்

தொட்டாற்சிணுங்கி செடியை வேருடன் எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து பசைபோல் செய்து வீக்கமுள்ள இடத்தில் தடவி விடவும். உலர்ந்த சோற்றுக் கற்றாழையை தடவலாம்.

மாட்டின் மடியில் புதிய இரத்த செல்கள் உருவாக

சாரணத்திஇலை – 100 கிராம் , கூரைப்பூ (காப்புகட்டு) இலை – 100 கிராம் எடுத்து 3 லிட்டர் தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். 3 லிட்டரானது 1 லிட்டர் கரைசல் வருமாறு தயார் செய்யவும். இதனை ஒரு நாளைக்கு 2 வேளை உள்ளே கொடுக்கலாம்.

ஜீரணக் கோளாறுக்கு (கழிச்சலுக்கு)

நடுத்தரமாக பழுத்த பப்பாளிப் பழத்தை துண்டாக நறுக்கி கொடுக்கலாம். பூண்டு – 20 கிராம், இஞ்சி – 20 கிராம் , பெருங்காயம் – 20 கிராம் , மிளகு – 20 கிராம், வெற்றிலை – 5 எண்ணம் . மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசைபோல் செய்து 25 கிராம் அளவு கொடுக்கலாம் . இம்மருந்தை சாதாரணமாக எல்லா மாட்டிற்கும் கொடுக்கலாம். இஞ்சி சாறு 50 மி.லி இதனுடன் சோடா உப்பு 10 கிராம் (சோடியம்பைகார்பனேட்) சேர்த்து கொடுக்கலாம்.

ஓமம் – 100 கிராம் எடுத்து இதனுடன் 1 லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க விடவும். 1 லிட்டரானது 25 மி.லி தண்ணீராக வற்றும் வரை செய்து 3 மணிக்கு ஒரு முறை இடை விடாது கொடுக்கவும். சுக்கு – 25 கிராம் , ஓமம் – 25 கிராம் , பூண்டு – 25 கிராம் , சீரகம் – 25 கிராம், மிளகு – 10 எண்ணம் , ஏலக்காய் – 10 எண்ணம், மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மாட்டுக்கு உள்ளுக்குள் கொடுக்கலாம்.

வயிறு உப்பிசத்திற்கு

விளக்கெண்ணெய் – 100 மி.லி , வெதுவெதுப்பான நீர் சேர்த்து நன்கு நுரை வரும் வரை கலக்கவும். இதனை 4 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுக்கவும். புங்கன் இலை 200 கிராம் எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க விடவும். ஒரு லிட்டரானது 500 மி.லி வரும் வரை வற்ற வைக்கவும். பின்னர் இதனுடன் சோடா உப்பு சேர்த்து கலக்கவும். இதனை 6 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுக்கவும். கடலை எண்ணெய், டர்பெண்டைன் எண்ணெய் 100 மி.லி சேர்த்து நுரை வரும் வரை கலக்கவும். இதனை 2 – 4 மணி நேரத்திற்கொரு முறை கொடுக்கவும்.

மூலிகை குடற்புழு மருந்து

அரை டம்ளர் அளவு மோரை தாமிர பாத்திரத்தில் எடுத்து 24 மணி நேரம் வைக்கவும். பின்னர் இதனுடன் 5–6 டம்ளர் தண்ணீர் கலந்து 2–6 டம்ளர் காலையில் 3–5 நாளைக்கு மாட்டிற்கு கொடுக்கலாம். தண்ணீர்விட்டான் கிழங்கை 1 கைப்பிடி எடுத்து அரைத்து 2–6 டம்ளர் தண்ணீரில் சேர்த்து கலக்கவும். இதனை காலை வேளையில் 2–6 டம்ளர் 3–5 நாளைக்கு கொடுக்கலாம்.

பப்பாளி விதை 25 – 100 கிராம் அளவு எடுத்து இதனுடன் கரும்பு சர்க்கரை சேர்த்து அரைக்கவும். இதனை காலை வேலையில் 5–7 நாளைக்கு கொடுக்கலாம். அகத்தி இலைச்சாறு 50 – 200 மி.லி காலை வேளையில் 5–7 நாளைக்கு கொடுக்கலாம். வேப்பம்பட்டை – 100 கிராம் , ஆமணக்கு வேர் – 100 கிராம் சேர்த்து 1 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைக்கவும். 1 லிட்டர் தண்ணீரானது 250 மி.லி அளவு வரும் வரை வற்ற வைக்கவும். இதனை காலையில் 50–350 மி.லி அளவு வரை 3 நாளைக்கு கொடுக்கலாம். பூண்டு – 10 கிராம் , மிளகு – 10 கிராம் சேர்த்து அரைத்து 100 மி.லி வேப்பெண்ணெயில் கொதிக்க வைக்கவும். பின்னர் 10 – 30 மி.லி அளவு 1 மாதத்தில் 3 நாளைக்கு கொடுக்கலாம். எலுமிச்சை சாறு 25 மி.லி , நல்லெண்ணெய் 25 மி.லி சேர்த்து கலந்து மாதத்திற்கு 3 நாளைக்கு கொடுக்கலாம். பாகற்காய் இலை – 2 கைப்பிடி எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து கொடுக்கலாம். இம்மருந்தை 3 மாத சினை மாட்டிற்கு கொடுக்கக் கூடாது. மாதத்திற்கொருமுறை கடுகு எண்ணெய் 150 மி.லி கொடுக்கலாம்.

கழிச்சலுக்கு

பூலைப்பூ (கூரைப்பூ) 1 கைப்பிடி எடுத்து அரிசி கழுவிய தண்ணீரில் சேர்த்து அரைத்து 2–3 வேளை கொடுக்கலாம். இளம் மாதுளம் இலை – 1 கைப்பிடி , நாவல்பட்டை – 1 கைப்பிடி , இளநீர் – தேவையான அளவு . மேற்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்கலாம். மூங்கில் இலை 1 கைப்பிடி அளவு எடுத்து இதனுடன் மோர் சேர்த்து கலந்து அரைத்து ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்கலாம். கருவேப்பிலை இலை 50–100 கிராம் அரைத்து ஒரு நாளைக்கு 2–3 வேளை தர வேண்டும்.

வயிற்று கோளாறுக்கு (Enteritis)

சரக்கொன்னை இலை 1 கைப்பிடி , வெற்றிலை 1 கைப்பிடி எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைத்து 1 லிட்டரானது 300 மி.லியாக வரும் வரை வற்ற வைக்கவும். இதனை 50–100 மி.லி எடுத்து 2 வேளை கொடுக்கலாம்.

மாட்டு உன்னி , பேனுக்கு

விளக்கெண்ணெயில் உப்பு சேர்த்து கலந்து உடம்பில் தடவலாம். உன்னிச்செடி இலை (Lantana) , பூ , காய் எல்லாம் சேர்த்து அரைத்த சாறு எடுத்து இதனுடன் மாட்டு கோமியம் சேர்த்து கலக்கி உடலில் தேய்க்கலாம். வேப்பெண்ணெயில் கல்உப்பு(பொட்டாசியம் குளோரைடு) சேர்த்து உடலில் தேய்க்கவும்.

தோல் நோய்க்கு (Dermatitis)

புங்கம் பட்டையை அரைத்து இதனுடன் புங்கன் விதையெண்ணெயில் கலந்து உடலில் மேல் பூச்சாக பூசவும். மஞ்சள் பவுடர் 10 கிராம், தொட்டாற்சினுங்கி இலை – 50 கிராம் , சேர்த்து அரைத்து 100 மி.லி வேப்பெண்ணெயில் கொதிக்க வைக்கவும் . பின்னர் இதனை எடுத்து மேல் பூச்சாக பூசலாம். எருக்கம் பாலை மேலே தடவ வேண்டும். வெப்பாலை இலை 1 கிலோ அளவு எடுத்து ஒரு பெரிய பாட்டில் போட்டு அதனுள் 1 லிட்டர் தேங்காயெண்ணெயை ஊற்றி மூடி விடவும். இதனை சூரிய ஒளியில் சுமார் 7 நாளைக்கு வைக்கவும். 7 நாட்கள் முடிந்த பின்னர் பாட்டிலில் கரும் நீல கலரில் எண்ணெய் இருப்பது தெரியும். இந்த எண்ணெயை இன்னொரு பாட்டிலில் எடுத்து ஊற்றவும். வெப்பாலை இலையை அரைக்கவோ நறுக்கவோ கூடாது. இந்த எண்ணெயை எடுத்து மாட்டின் மேல் பகுதியில் தடவலாம்.

மாட்டில் மருவுக்கு (Warts)

மயில் துத்தம் எடுத்து தண்ணீர் விட்டு பிசைந்து பசைபோல் செய்து மரு உள்ள இடத்தில் 1 நாளைக்கு 3–4 தடவை தேய்க்கலாம்.

குறிப்பு : மாட்டில் மரு உள்ள இடத்தில் மட்டும் தேய்க்கவும்.

மாட்டிற்கு மூச்சு திணறல்

தேவையானவை :துளசி – 100 கிராம், சுக்கு – 50 கிராம், மிளகு – 10 எண்ணம் , வெற்றிலை – 5 எண்ணம் , கிராம்பு – 5 எண்ணம் , மேற்கண்ட அனைத்தும் சேர்த்து இதனுடன் 100 கிராம் வெல்லம் மற்றும் 250 மி.லி தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். இதனை 100 – 250 மி.லி அளவு எடுத்து ஒரு நாளைக்கு 2–3 வேளை கொடுக்கலாம். மல்லி தழை – 250 கிராம், துளசி – 50 கிராம் , பூண்டு – 25 கிராம், சூடம் – 5 கிராம் , மிளகு – 10 எண்ணம் . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து சாறு எடுத்து ஒரு நாளைக்கு 2 வேளை கொடுக்கலாம்.

வாய்க்காணை மற்றும் கால்காணைக்கு (FMD)

பப்பாளி பழம் அரைத்து இதனுடன் தேன் கலந்து மாட்டின் வாய் , நாக்கு , உதடு பகுதிகளில் தடவலாம். வேப்பெண்ணெய்யில் சூடம் சேர்த்து கொதிக்க வைத்து கால் குளம்புகளில் தடவலாம். வாழை இலையை அனலில் காட்டி அதன் மேல் பன்றியின் கொழுப்பு வைத்து உள்ளே கொடுக்க வேண்டும் . வாழை பழத்தை பன்றி கொழுப்புபில் கலந்து உள்ளே தர வேண்டும். தேக்கு மர எண்ணெயை கால் குழம்புகளிலுள்ள புண்களுக்கு போடலாம்.

மாட்டின் மடியில் புண், காயம் இருந்தால்

தேங்காய் நார் 1 கைப்பிடி அளவு எடுத்து தீயில் சுட்டு சாம்பாலை எடுத்து இதனுடன் விளக்கெண்ணெய் சேர்த்து பிசைந்து பசைபோல் செய்து மாட்டின் மடியில் தடவலாம்.

காய்ச்சலுக்கு (Pyrexia)

சுக்கு , மிளகு, பூண்டு , வெற்றிலை , துளசி , கானபயறு ,வேப்பம்பட்டை எல்லாம் எடுத்து தண்ணீர் விட்டு கொதிக்க வைக்கவும். பின்னர் இந்த சாறை ஒரு நாளைக்கு 3 வேளை கொடுக்கலாம்.

கொம்பு ஒடிந்தால்

ஆலமர பாலை துணியில் துவைத்து உடைந்த கொம்பில் வைத்து கட்டி விடலாம்.

புழுவைத்த புண்ணிற்கு

சீத்தா இலை அல்லது பழம் அரைத்து பசைபோல் செய்து புழு வைத்த புண்ணில் வைத்து கட்டி விடவும்.

புது புண்ணிற்க்கு

வெங்காய சாறு துவைத்த துணியை கட்டி விட வேண்டும்.

மாட்டில் மருவுக்கு

சுண்ணாம்புடன் இஞ்சி சாறு சேர்த்து பிசைந்து பசைபோல் செய்து மாட்டில் மருவு உள்ள இடத்தில் தடவி விடவும்.

கோழிகளுக்கு கழிச்சல் நோய் வந்தால்

மஞ்சள் சாறு , பூண்டு , வெங்காயம் சேர்த்து அரைத்து 2–10 துளிகள் 4 வேளைக்கு கொடுக்கலாம்.

கோழிகளுக்கு பேன் வந்தால்

சீத்தா அல்லது எருக்கு இலைகளை நறுக்கி கோழிகள் அடையும் இடத்தில் பரப்பி விட வேண்டும். இதில் ஒட்டி கொள்ளும் பேன்களை இலையுடன் எளிதில் அப்புறப்படுத்தி விடலாம்.

டி. தனபாலன்
குளிரமா, அய்யப்பன் காவு
கடம்கோடு
கரிஸ்காரப்புள்ளி அஞ்சல்
பாலக்காடு – 678551
கேரளா , d.dhanapalan@gmail.com
செல் : 09400600589

ஊட்டி கிருஷ்ண மூர்த்தியின் கேரட் கழுவும் இயந்திரம்

நீலகிரி மாவட்டம் ஊட்டி பஸ் நிலையம் அருகில் திரு. கிருஷ்ணமூர்த்தி (67) வசித்து வருகிறார். இவர் 10 ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்குச் சொந்தமாக 30 ஏக்கர் நிலம் உள்ளது. அதில் 10 ஏக்கரில் கேரட்டும் , 20 ஏக்கரில் தேயிலையும் சாகுபடி செய்து வருகிறார். இவருக்கு 2 மகன்கள் உள்ளனர். இருவரும் தந்தைக்கு உதவியாக விவசாயம் செய்து வருகின்றனர். இவர் சொந்தமாக வேளாண்மை அங்கமான நீலகிரி உருளைக் கிழங்கு மற்றும் இயற்கை காய்கறிகள் உற்பத்தி செய்வோர் குழுவிற்கு தலைவராக பொறுப்பில் உள்ளார்.

கேரட் கழுவும் இயந்திரம்

கடந்த 2005 ம் ஆண்டு விவசாயிகள் அனைவரும் கேரட்டை ஆற்று நீரில் கழுவி விடுவதும், இதற்கான கூலியாட்கள் அதிகமாகவும் வருவதைக் கண்ட இவர் கேரட்டை கழுவும் இயந்திரத்தை தயார் செய்ய எண்ணினார். ஆற்று நீரில் கேரட்டை கழுவுவதால் சேதமடைதல் ஏற்படுவதால் கருவியை உருவாக்கியுள்ளார். இவரது யோசனைப்படி மின்சார கன்வேயர் மூலம் தண்ணீர் கொண்டு சுத்தம் செய்வது போன்ற யோசனையை சேலம் மாவட்டம் ஜோதி டிரேடர்ஸ் லேத் திரு. கணேஷ் என்பவரிடம் சொல்லி இயந்திரத்தை உருவாக்கியுள்ளார்.

இயந்திரத்தின் முக்கிய பாகங்கள்

தண்ணீர் டேங்க் – 1, கன்வேயர் – (12 x 5 அடி) , ரோலர் – (14 x 5 அடி) , வைப்ரேட்டர் – 1, மோட்டர் – 12.5 ஹெச்.பி , பெல்ட் – 1 ஸ்டீல் ட்ரே பிளேட் – (7x 3 அடி).

வேலை செய்யும் விதம்

முதலில் லாரியிலுள்ள கேரட்டை தண்ணீர் விட்டு அதிலிருந்து தண்ணீர் டேங்க்கிற்கு அனுப்பப்படுகிறது. பின்னர் தண்ணீர் டேங்கிலிருந்து கன்வேயர் மூலம் மெதுவாக வந்து ரோல்லருக்கு வந்தடைகிறது. ரோல்லரிலிருந்து சுத்தம் செய்து ஸ்டீல் பிளேட்டுக்கு அனுப்பப்படுகிறது. ஸ்டீல் பிளேட்டின் மேல் பகுதியில் தண்ணீர் குழாய் இணைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து

தண்ணீர் அடித்து மீண்டும் சுத்தம் செய்யப்பட்டு சாக்கு பையில் அடைத்து மூட்டப்படுகிறது. ஒரு மூட்டையில் சுமார் 80 கிலோ கேரட்டை வைத்து தைத்து அடைக்கப்படுகிறது.

கருவியின் சிறப்பு அம்சங்கள் : கருவியில்லாமல் வேலையாட்கள் கொண்டு சுத்தம் செய்தால் சுமார் 25 வேலையாட்கள் தேவைப்படுவார்கள் ஆனால் கருவியின் மூலம் சுத்தம் செய்தால் 10 வேலையாட்களே போதுமானது. இயந்திரத்தின் மூலம் ஒரு நாளைக்கு 7–8 டன் கொள்ளளவு கேரட்டை சுத்தம் செய்யலாம். ஆனால் சாதாரணமாக வேலையாட்கள் கொண்டு செய்தால் 5–6 டன் கேரட் மட்டுமே சுத்தம் செய்ய முடியும். 1 கிலோ கேரட்டை சுத்தம் செய்ய 3 லிட்டர் தண்ணீர் மட்டும் போதுமானது. இந்த இயந்திரத்தைக் கொண்டு பீட்ரூட், பீன்ஸ் முள்ளங்கி மற்றும் உருளைக் கிழங்கு வகைகளையும் சுத்தம் செய்யலாம். இது வரைக்கும் இவர் 7 இயந்திரத்தை செய்து மற்ற விவசாயிகளுக்கும் கொடுத்து உள்ளார். இக்கருவியின் விலை ரூ. 3.5 லட்சம் ஆகும். இக்கருவியைக் கொண்டு பயன் பெற்றவர்கள் : சுரேஷ்குமார் , ஊட்டி செல் : 9486928810 , சரவணன் , குளிச்சோலை , செல் : 9443352148, உலகப்பன் , கபலடா , விவேக் , தலைக்கட்டி மந்து , லட்சுமணன் , ஊட்டி .

முகவரி :
பி. கிருஷ்ணமூர்த்தி ,நீலகிரி மாவட்ட உருளை கிழங்கு காய்கறி உற்பத்தியாளர் சங்கம், மிஸ்டிக் இன்,
பழைய அக்ரஹாரம் , கம்மார்சியல் ரோடு ,
உதகமண்டலம்
நீலகிரி மாவட்டம் – 643001
செல் : 9443604262

அம்பத்தூர் ஜோஸ்வாவின் நிலவேம்பு கசாயம் தயாரிக்கும் கருவி

சென்னை அம்பத்தூர் ஓ.டி பகுதியில் கே.வி.கே காலணியில் திரு. ஜோஸ்வா (32) வசித்து வருகிறார். இவரது பூர்வீகமானது விழுப்புரம் மாவட்டமாகும். தனது 10 ம் வகுப்பு முடித்த பிறகு சென்னைக்கு வந்து பல தொழிற்சாலைகள் , இ.பி அலுவலகம் , தேனீர் கடை போன்ற இடங்களில் வேலை செய்து கடைசியாக டீ கடையில் வேலை செய்யும் போது ஏற்பட்ட அனுபவங்களே தனது வாழ்க்கையின் திருப்பு முனை என்று கூறுகிறார். போன வருடம் தமிழ் நாட்டில் டெங்கு காய்ச்சல் பரவி பல பேர் உயிரிழந்தனர் இதனைக் கண்டவர் தாம் மனம் உடைந்து போனதாகக் கூறினார். பின்னர் தமிழக அரசு அறிவித்த நில வேம்பு கசாயம் தயாரிப்பு முறையை எடுத்துக் கூறியது. இதனால் தம் அறிவுக்கு எட்டியவாறு தமது மனைவியிடம் யோசனை கேட்டு திருப்தியடைந்தவுடன் ஒரு மாடல் இயந்திரம் ஒன்றை பலமுறை முயற்சி செய்து வடிவமைத்தார். பின்னர் இயந்திரத்தை வெற்றிகரமாக நடைமுறைக்கு கொண்டு வந்தார்.

கருவியின் முக்கிய பாகங்கள்

மொத்த எடை – 40 கிலோ , தண்ணீர் தொட்டி – 3000 மி.லி , கன்டெய்னர் கொள்ளளவு – 300 மி.லி, கன்டெய்னர் வடிதிறன் கொள்ளளவு – 1000 கிராம், கன்டெய்னர் அமைப்பு – உருளை வடிவம் ஒரு நிமிடத்திற்கு கப் கசாயம் செய்யும் திறன், கன்டெயனரின் எண்ணிக்கை – 2 , டிஜிட்டல் டிஸ்பிளே, டிஜிட்டல் கவுண்டர் , வெப்ப சமநிலை கன்ட்ரோலர், தானாகவே கன்டெய்னரை சுத்தம் செய்தல் உள்ளது.

கருவி வேலை செய்யும் விதம்

நில வேம்பு குடிநீர் இயந்திரத்தை ஆன் செய்தவுடன் வெப்பநிலையை வெளியே உள்ள இயந்திரம் காட்டும். பின்னர் 5–7 நிமிடங்களில் எந்த விதமான கசாயம் வேண்டும் என வெளியே உள்ள இயந்திரம் காட்டும். அப்பொழுது நாம் நில வேம்பு கசாயம் பட்டன் 1 ஐ அழுத்தினால் கசாயம் தயாராகிவிடும்.

கசாயம் கொள்ளளவை காட்டுதல்

இந்த முறையை தேர்ந்தெடுத்தால் எத்தனை கப் கசாயம் தயாராகியுள்ளது என்பதனை அறிய கே.ஏ.எஸ் – 1, கே.ஏ.எஸ் – 2 என்ற பட்டனை அழுதினாலே போதும் உடனே வெளித்திரையில் தற்பொழுது எவ்வளவு வெப்பநிலை உள்ளது எத்தனை கப்பில் கசாயம் நிரம்பி உள்ளது என்பது தெரிந்துவிடும்.

கருவி தயார் நிலையில் வைத்தல்

முதலில் மெனு பட்டனை 5–6 நொடி அழுத்தினால் இயந்திரமானது ரகசிய எண்ணை கேட்டும் அதாவது பாஸ்வேடு பின்பு திரும்பவும் மெனு பட்டனை அழுத்தவும். இப்பொழுது வெளித்திரை திறந்துவிடும் கே.ஏ.எஸ் – 11 எப் இந்த பட்டனை அழுத்தினால் எவ்வளவு கப் நில வேம்பு கசாயம் வேண்டும் என்பதனை இயந்திரம் கேட்கும். இதனை என்.வி.கே பட்டனை அழுத்தவும் பட்டன் 1ஐ அழுத்தினால் குறைவான நில வேம்பு கசாயம் கிடைக்கும். சுடு தண்ணீர் வேண்டு மென்றால் சுடு தண்ணீர் பட்டன் 2 ஐ அழுத்தலாம். எப்பொழுதுமே வெப்பநிலை டிஸ்ப்ளே 000 ஆக இருக்க வேண்டும். கசாயம் வேண்டுமென்றால் வெப்பநிலையை சரி செய்து கொள்ளலாம் .

வெப்பநிலையை சரி செய்தல்

வெப்பநிலையை உயர்த்த வேண்டு மென்றால் பட்டன் 1 ஐ அழுத்தவும், குறைக்க வேண்டு மென்றால் பட்டன் 2 ஐ அழுத்தவும். இந்த இயந்திரத்தில் 11/2 லிட்டர் தண்ணீர் கொள்ளளவுள்ள 2 எஸ்.எஸ் பாத்திரம் உள்ளே வைக்கப்பட்டுள்ளதால் வெப்பம் எப்பொழுதுமே இருக்கும்.

கசாயம் கே.ஏ.எஸ – 1 ஊற வைத்தல்

தயார் செய்யப்பட்ட கசாயத்தை எப்பொழுதுமே வெப்பமாக சூடாக இருக்க வேண்டுமானால் பட்டன் 1ஐ அழுத்தினால் போதும். சூடு கொஞ்சமாக இருக்க வேண்டுமானால் பட்டன் 2 ஐ அழுத்தினாலே போதும். இயந்திரத்தை எப்போழுதும்ஆப் செய்து விடவும் . கசாயம் தேவைப்படும் போது இயந்திரத்தை ஆன் செய்து தயார் செய்யலாம். அடிக்கடி 15 ஆம்பியர் பீஸ் கட்டையை சோதனை செய்யவும் ஏனென்றால் மின்சார பற்றாக்குறை ஏற்பட்டால் இயந்திரம் வேலை செய்யாது . இந்த இயந்திரத்தில் நிலவேம்பு கசாயம் தயார் செய்ய வேண்டு மென்றால் பட்டன் கே.ஏ.எஸ் ஐ தட்டினால் Tamil Nadu Government Nilavembu Kudineer Machine வெளித்திரையில் தெரிந்து விடும்.

இவர் இது வரைக்கும் 3 இயந்திரம் செய்து கொடுத்துள்ளார். இயந்திரத்தின் விலை தற்போது ரூ. 50,000 க்கு கொடுக்கிறார். இவர் இப்பொழுது பட்டன் முறையை பயன்படுத்தி வருகிறார். இனி வரும் காலங்களில் Sensor selection coin முறையை பயன்படுத்தி திட்டமிட்டுள்ளார். ஏனென்றால் படிக்கத் தெரிந்தவர்கள் எளிதில் பட்டனை அழுத்தி தேவையான கசாய குடி நீர்களை எளிதில் பெற்று விடுவர். படிப்பறிவில்லாதவர்களுக்கு இந்த coin மேற் பகுதியில் ''நிலவேம்பு கசாயம்'' என்று தயார் செய்து கொடுத்தால் எளிதில் பின்பற்றுவர் என்ற யோசனையில் தயார் செய்து வருகிறார். இவர் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள அரசு இந்திய மருத்துவ கல்லூரிக்கு 3 இயந்திரம் செய்து கொடுத்துள்ளார். இதனை நல்ல முறையில் பயன்படுத்தி வருகின்றனர்.

திரு. ஜோஸ்வாஜீடா
11 ஏ, கே.வி.கே தெரு,
விஜயலட்சுமிபுரம்,
அம்பத்தூர் ஒ.டி,
சென்னை – 53
தொலைபேசி – 044 – 606 3535

அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்க பொதுக்குழு கூட்டம் (அட்டை படம்)

அடிமட்ட கண்டுபிடிப்பாளர்கள் சங்கத்தின் 14 வது பொதுக்குழு கூட்டம் 10.08.2014 ம் தேதி ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணிக்கு விழுப்புரம் மாவட்டம் செஞ்சி தாலுகா , கெங்கவரம் கிராமத்தில் உள்ள திரு குப்புச்சாமி செட்டியார் தோட்டத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் சங்க உறுப்பினர்கள் 14 பேர் மற்றும் சமூக ஆர்வலர்கள் 37 பேர் உட்பட 51 பேர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் 7 பேர் புதிய உறுப்பினர்களாக சேர்ந்தனர். திருச்சி – புத்தூர் சேர்ந்த டி. பார்த்திபனுக்கு தொழில் அபிவிருத்தி கடனாக ரூ. 20,000 வழங்கப்பட்டது . கூட்டத்தில் வந்தோருக்கு மரம் கருணாநிதி மரக்கன்றுகள் வழங்கி கௌரவப்படுத்தினார் . குப்புசாமி பண்ணையில் கடைபிடிக்கப்படும் இயற்கை வேளாண்மை முறைகள் பண்ணையை பார்வையிடும் சமயம் விவரமாக எடுத்துரைக்கப்பட்டது. கூட்டம் மாலை 4.00 மணிக்கு முடிவடைந்தது.

தொகுப்பு : ஜெயபாண்டி , சேவா

காடைக்கண்ணி

இது ஒரு சிறு தானிய பயிர் . தினை மாதிரியே இருக்கும். வயது 65 நாட்கள் மானாவாரி நீர்பாசனத்திலும் விதைக்கலாம். பொட்டு நீக்கி அரிசி எடுத்து முறுக்கு சுட நன்றாக இருக்கும். சாமை, குதிரைவாலி போன்று சாதம் சமைத்து சாப்பிடலாம். மதுரை ''சேவா'' அலுவலகத்தில் மிக சிறிய அளவு (100 கிராம்) விதைகள் உள்ளது. இதனை திருச்சி ஜெபாசிங் கொடுத்துள்ளார். தேவைப்படுவோர் எங்களை தொடர்பு கொள்ளலாம்.

– ஆசிரியர் .

குப்புசாமியின் செலவில்லா வேளாண்மை

நான் கடந்த எட்டு ஆண்டுகளாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறேன். நச்சு மருந்துகள் அடிக்காமலும் செயற்கை உரங்கள் இடுவதையும் முற்றிலும் தவிர்த்து விட்டேன். அதனால் ஏற்பட்ட நன்மைகளை பகிர்ந்து கொள்கிறேன். முதலில் நிலத்தில் மண்புழுக்கள் நிறைய உற்பத்தி ஆகி உள்ளது. அதாவது ஒவ்வொரு அங்குல இடைவெளியிலும் அது உள்ளது. மண்ணின் மேல் ஈரம் பட்டவுடன் மண்புழு எருவை மேலே கொண்டு வந்து தள்ளுகிறது. அந்த எரு மழை பெய்தவுடன் நிலத்தின் எல்லா பாகங்களுக்கும் சென்று விடுகிறது. அதே போல் கரையான்களும் நிலத்தில் அபரிமிதமாக பெருகியுள்ளது. மரத்தின் அடியில் விழும் சருகுகளையும், தென்னை ஓலைகளையும் தின்று எருவாக்கி விடுகிறது. நிலம் பெருக்கி சுத்தம் செய்வதைப் போன்றுள்ளது. கரையான்கள் நிலத்தில் 100 அடி ஆழம் வரை துளை இடுகிறது. மண்புழுக்கள் 6 அடி வரை துளைகள் இடுகின்றன. அதன் துளைகள் ஊடே காற்று செல்வதால் நிலத்திலுள்ள நுண்ணுயிர்கள் காற்றிலுள்ள 79 சதவீதம் தழை சத்தை கிரகித்து நிலத்திற்கு வளம் சேர்க்கிறது. கரையான்கள் பூமிக்கு அடியில் உள்ள ஈர மண்ணை மேலே கொண்டு வந்து சேர்த்து செடி கொடி வாடாமல் இருக்க உதவுகிறது. காடுகளில் கரையான்கள் அதிகம் இருப்பதினால் தான் , அங்கு எப்படிபட்ட வறட்சி ஏற்பட்டாலும் செடி , கொடி, மரங்கள் பட்டு போவதில்லை. கரையான்கள் செயல்பாடு மண்புழுக்களின் செயல்பாடுகளை விட அதிகம். முன்னோர்கள் கரையான் புற்றுகளை தெய்வமாக வணங்கி வந்தனர். அதன் செயல்பாடுகளை அறிந்தே நம் முன்னோர்கள் அதை வணங்கும் படி செய்துள்ளார்கள். ஆகவே தோட்ட நிலங்களில் கரையான் புற்றுகள் இருந்தால் அதை அழிக்க கூடாது. அதே போன்று தோட்டத்தில் மேல் பரப்பு பாசனம் செய்யாமல் இரண்டு மரங்களுக்கு இடையில் கால்வாய் பாசனம் (ஆழமான வாய்க்கால்) செய்வதால் மரங்களுக்கு வேண்டிய தண்ணீர் மட்டும் எடுத்துக் கொள்கிறது. அதிகப்படியான நீர் தேவையும் குறைகிறது. கால்வாயில் மட்டும் நீர் விடுவதால் , தண்ணீர் பாயாத மற்ற இடத்தில் நுண்ணூட்டங்கள் நன்கு வேலை செய்கிறது . மழை அதிகம் பெய்யும் நாட்களில் அந்த கால்வாய்கள் வடிகாலாவும் அமைந்து விடுகிறது. அதிகப்படியான பாசனம் செய்வதால் மரங்களின் காய்ப்பு தன்மை குறைந்து விடுகிறது.

தோப்பில் நிலத்தை உழவு செய்யாமலிருத்தல்

கரையான்களும் மண்புழுக்களும் நிலத்தில் இரு துளைகள் மூலம் மழை பெய்தவுடன் நீர் அதன் உட் சென்று நீர் பிடிப்பு தன்மையை அதிகரிக்கிறது. உழுவதாலும், கொத்திவிடுவதாலும் களைச்செடியின் வித்துகள் பூமியின் உட் சென்று அதிகப்படியான களைகள் உண்டாக ஏதுவாகிறது . களைச்செடிகளின் விதைகளை பறவைகளும், பல ரகமான எறும்புகளும் தின்று விடுகின்றன. (நச்சுமருந்துகள் தெளிக்காமல் இருப்பதால் அவை பல்கி பெருகி உள்ளன) பறவைகள் பல இடங்களுக்கும் சென்று பல வகையான தாவரங்களின் பழங்களை தின்று , அது இடும் எச்சத்தின் மூலம் தோட்டத்தில் பல புதிய வகை தாவரங்கள் உண்டாக வழி செய்கிறது. நிலத்தின் ஓரங்களில் வேலி கட்டுவதற்கு பதில் பல வகையான தாவர செடிகள் வளர்ந்து , அவைகள் வேலி போல் உண்டாகி நல்ல உயிர் வேலியாக அமைந்துள்ளது. நிலத்தின் ஓரங்களில் வேலி மசால் விதைகளை தூவி விடுவதின் மூலம் நல்ல வேலியாக அமைகிறது. எட்டு கால் சிலந்தி பூச்சிகள் தோட்டம் முழுதும் ஆயிரக்கணக்கில் உண்டாகி , தீமை செய்யும் பூச்சிகளை பிடித்து தின்று விடுகிறது. நச்சு மருந்துகள் தெளிக்காமலே மா, எலுமிச்சை , கொய்யா , சப்போட்டா மரங்கள் நன்கு மகசூல் தருகின்றன. வளர்ந்த களைச்செடிகளை அறுத்து அதை மூடாக்காக பயன்படுத்துவதாலும் களைகள் கட்டுபடுகின்றன. பூஞ்சாளவித்துக்கள் நிறைய உண்டாகி எல்லா விதமான மக்காத பொருட்களையும் மக்க செய்கின்றன. நிலத்தின் மேற் பரப்பில் விழும் மரத்தின் சருகுகளும், தென்னை ஓலைகளையும் கரையான்கள் தின்று நிலத்திற்கு வளம் சேர்க்கின்றன. வாழை மரங்களும் நன்கு வளர்ந்து பெரியதார்களை போடுகின்றது. நச்சு மருந்துகள் , செயற்கை உரங்கள் பயன்படுத்தாதினால் நிலம் நன்கு வளம் அடைந்து தென்னை மரங்கள் (150) இந்த ஆண்டு இரு மடங்கு மகசூல் கொடுத்துள்ளது. எந்த இடு பொருள் செலவும் இல்லாததால் வருமானம் அதிகம் கிடைக்கிறது. எனது 2 ஏக்கர் தோட்டத்தில் வருடத்தில் குறைந்தது ரூ. 50,000/– வருமானம் வருகின்றது. எனது விட்டிற்கு தேவையான விறகு, காய்கறிகள் , பழங்கள் எல்லாம் கிடைக்கின்றன. பப்பாளி , பல ரக வாழை பழ மரங்கள் , எலுமிச்சை (20) , சப்போட்ட (10) , பலா , மா (20) விளைகிறது. தினம் ஏதாவது ஒரு பழம் சாப்பிட முடிகிறது. பல வகையான கீரை வகைகளும் நச்சு இல்லாமல் சாப்பிட முடிகிறது.

உதாரணம் நச்சு கொட்டை கீரை , அரைக்கீரை , பொன்னாங்கண்ணி, மஞ்சள் கரிசலாங்கண்ணி , அகத்தி , தவசு முருங்கை கீரைகளும் கிடைக்கின்றன. மூலிகை செடிகளும் வைத்துள்ளேன். தேக்கு மரங்களும் நன்கு வளர்கின்றன. இயற்கை விவசாயத்தை செலவில்லாமல் செய்வதால் வருமானம் கூடுகிறது. ஆகவே ஒரு சிறிய விவசாயி டெலிபோன் வைத்துக்கொள்ளவும் வழி வகை செய்துள்ளது. மதுரை சேவா நிறுவனம் என்னை குஜராத்தில் உள்ள பாஸ்கர் சாவே இயற்கை விவசாய பண்ணைக்கு சென்று வந்ததில் இருந்து பொருளாதார பிரச்சனை இல்லாமல் வாழ்ந்து வருகிறேன். இதனை படித்து பார்க்கும் விவசாயிகள் ஒரு முறை நேரில் வந்து எனது தோட்டத்தை பார்க்கும் படி கேட்டுக்கொள்கிறேன்.

தினவருமானம் – எலுமிச்சை கறிவேப்பிள்ளை , தென்னங்கீற்றுகள், வாரவருமானம் – எலுமிச்சை, இளநீர், மாதவருமானம் – தேங்காய், இளநீர், சப்போட்டா, மாம்பழம் . வருடவருமானம் – தேங்காய்கள் , கறவைமாடுகள் . தோட்டத்தின் இடைவெளிப்பகுதியில் கிளிரிசிடியா நன்கு வளர்ந்து கறவை மாடுகளுக்கு தீவனம் கிடைக்கிறது.

த. குப்புசாமி செட்டியார்
த/பெ. தனபால் ,
மேட்டு தெரு
கங்காவரம் , கணக்கன்குப்பம்
ஆலம்பூண்டி வழி
செஞ்சி தாலுகா
விழுப்புரம் மாவட்டம் – 604151
செல் : 954145294618 , 9585854277

ராஜசேகரின் மூலிகை வைத்தியம்

மதுரை மாவட்டம் வாடிப்பட்டி தாலுகா , சோழவந்தானில் திரு ராஜசேகர் (68) வசித்து வருகிறார். இவர் 12 ம் வகுப்பு வரை படித்து விட்டு இராணுவத்தில் 10 ஆண்டுகள் பணியாற்றி விட்டு கடந்த 30 வருடங்களாக கனரா வங்கியில் கிளார்க் வேலை செய்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவருக்கு 1 மகள் உள்ளார். இவர் சிறு வயது முதலே மூலிகை மற்றும் விவசாயப் பணியில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். இவரது பாட்டி செல்லம்மாளிடம் மூலிகை வைத்தியத்தை கற்றுக் கொண்டார். தற்போது மனிதர்களுக்கும் கால்நடைகளுக்கும் சில மூலிகை வைத்தியம் செய்து வருகிறார். இவரது மூலிகை வைத்தியத்தை கூறி வருகிறார். செல்லம்மாளின் மூலிகை வைத்திய முறைகள் பின்வருவன.

கால்காணை மற்றும் வாய் காணைக்கு

கோவை இலைச்சாறு 200 மி.லியுடன் வெள்ளைப்பூண்டு 5 பூண்டு, மஞ்சள் பொடி 20 கிராம் சேர்த்து உள்ளுக்கு கொடுக்க வேண்டும்.

புழு வைத்த புண்ணிற்கு

நாயுருவி செடி –1, இதனுடன் கஸ்தூரி மஞ்சள் 30 கிராம் சேர்த்து பசை போல் செய்து புண் உள்ள இடத்தில் 2 வேலை தடவலாம். இது ஆறாத புண் மற்றும் புழு இருந்தால் வெளியே வந்து விடும்.

கோழி கழிச்சலுக்கு

பொடுதலை இலை – 1 கைபிடி , சின்ன வெங்காயம் – 3 எண்ணம் , வெள்ளை பூண்டு – 3 எண்ணம் , வெந்தயம் – 10 கிராம் மஞ்சள் பொடி – தேவையான அளவு . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து மிளகு அளவு உருண்டை செய்து கோழிக்கு 2 வேளை கொடுக்க வேண்டும்.

ஆடு, மாடு கழிச்சலுக்கு

மயிலிறகு பகுதியின் (20 மயிலிறகு) வெள்ளை நிறப்பகுதியை எடுத்து விளக்கெண்ணெய் தீபத்தில் வாட்டி பிசைந்து இதனுடன் தேன் 100 மி.லி சேர்த்து மாடு ஆடுகளுக்கு கொடுத்தால் உடனே கழிச்சல் நின்று விடும்.

கால்நடைகளுக்கு விஷக்கடிக்கு

தேவையான பொருட்கள் : நாயுருவி இலை – 1 கைப்பிடி , சிறு கீரை வேர் – 1 கைப்பிடி , குப்பை மேனி இலை – 1 கைப்பிடி , பூலைப்பூ இலை – 1 கைப்பிடி , வாகை இலை – 1 கைப்பிடி , வேப்பிலை – 1 கைப்பிடி . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து பவுடர் செய்து புளிச்ச தண்ணீரில் கலந்து கொடுக்கலாம். மாடுகளுக்கு 100 மி.லியும், ஆடுகளுக்கு – 50 மி.லி கொடுக்கலாம். மனிதர்களுக்கு 10 மி.லியும் கொடுக்க வேண்டும்.

வயல்வெளிக்குள் பாம்புகள் வராமலிருக்க

தேவையானவை : வெள்ளை பூண்டு – 20 கிராம், பெருங்காயத்தூள் – 20 கிராம் , கஸ்தூரி மஞ்சள் – 20 கிராம், பூலாங் கிழங்கு – 20 கிராம் , வசம்பு – 20 கிராம் , ஓமம் – 20 கிராம் , சூடம் – 20 கிராம். மேற்க்கண்ட

அனைத்தும் சேர்த்து அரைத்து பசைபோல் செய்து ஒரு பிளாஸ்டிக் பாட்டிலில் அடைத்து ஆங்காங்கே ஓட்டை போட்டு நிலத்தின் நான்கு பக்கங்களிலும் நான்கு பாட்டில்கள் வைத்தால் பாம்பு நிலத்தின் பக்கம் வராது என நம்புகிறார். இம்முறையை இவரது வாழை மற்றும் தென்னைத் தோப்பில் வைத்துள்ளார்.

வீட்டிற்குள் எலி , வண்டுகள் வராமலிருக்க

தேவையானவை : இலுப்பம் பிண்ணாக்கு – 20 கிராம் , வெள்ளை பூண்டு – 20 கிராம் , பெருங்காயத்தூள் – 20 கிராம் , வசம்பு – 20 கிராம் , ஓமம் – 20 கிராம் . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பசை போல் செய்து வைக்கவும். ஒரு தக்காளிப்பழம் அல்லது சாதத்தில் சுண்டக்காய் அளவு இந்த பசையை கலந்து வீட்டின் நான்கு பக்கங்களிலும் வைத்தால் எலி , வண்டு, பாம்பு போன்றவை வராது.

இயற்கை இட்லி பொடி

தேவையான பொருட்கள் : காணப்பயிர் – 50 கிராம் , தொலி உளுந்து – 50 கிராம், மிளகாய் வத்தல் பொடி – 50 கிராம், பெருங்காயம் – 50 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பவுடர் செய்து சிறிதளவு நல்லெண்ணெயில் கலந்து இட்லிக்கு பொடியாக சாப்பிட ருசி அதிகமாகும். ஜீரணம் அதிகமாகும்.

காளான் பஜ்ஜி

தேவையான பொருட்கள் : கடலைமாவு – 250 கிராம் , அரிசிமாவு – 50 கிராம், பெருங்காயம் – 10 கிராம், எலுமிச்சை சாறு – 10 மி.லி, மிளகாய் பொடி – 50 கிராம்,உப்பு தேவையான அளவு . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து பவுடர் செய்து நீரில் கலந்து பஜ்ஜி மாவுவில் செய்வது போல் செய்யவும். பின்பு பஜ்ஜி மாவில் காளானில் தடவி பஜ்ஜி செய்யலாம். இம்மாவில் காளான் மட்டுமல்லாது மிளகாய் , உருளைக் கிழங்கு, வாழைக்காய், ஓம வள்ளி இலை, காளி பிளவர் கொண்டு பஜ்ஜி செய்யலாம்.

தென்னை மற்றும் வாழைக்கு உரமாக காளான் கழிவு

தனது வீட்டில் காளான் உற்பத்தி செய்து வருகிறார். 1 மாதத்திற்கு சுமார் 100 கிலோ காளான் கழிவு மீதமாகிறது. இதனை எடுத்து 1 வாழைக் கன்றுக்கு 2 கைப்பிடி அளவு எடுத்து உரமாகப் பயன்படுத்தி வருகிறார். இந்த உரத்தைப் பயன்படுத்துவதால் பயிர் நன்றாக செழிப்பாகவும் வளருகிறது. பூச்சி, நோய் தாக்குதல் குறைவதாகக் கூறுகிறார்.

திரு. இராஜசேகர்
ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி
90 எப் , டீச்சர்ஸ் காலனி ,
வாடிப்பட்டி ரோடு,
சோழவந்தான் ,
மதுரை மாவட்டம் ,
செல் : 9095669626

சுந்தரராமனின் இயற்கை வேளாண்மை உத்திகள்

திரு சுந்தரராமனுக்கு (73) சொந்தமாக 12 ஏக்கர் நிலமும் 2 கிணறும் உள்ளது. இவர் கடந்த 20 வருடங்களாக இயற்கை வேளாண்மை முறையில் இராசயன உரம் , மருந்து இல்லாமல் விவசாயம் செய்து வருகிறார். இவருக்கு உறுதுணையாக இவரது குமாரர் திரு. இராமகிருஷ்ணனும் விவசாய வேலைகளை ஈடுபாடுடன் கவனித்து வருகிறார். இவருடைய இயற்கை வேளாண்மை முறைகளை ஏற்கனவே நம் வழி வேளாண்மை பருவம் 9 இதழ் 4 ல் பிரசரித்து இருந்தோம். தற்சமயம் சில புதிய உத்திகள் மற்றும் கூடுதல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

சாண எரிவாயு மூலம் மஞ்சள் கிழங்கு பாதுகாத்தல்

இவரது பண்ணையில் 5–7 பசுமாடுகள் எப்பொழுதும் பராமரித்து வரப்படுகின்றன. இதில் கிடைக்கும் சாணத்தை வைத்து சாண எரிவாயு கலனை இயக்கி வீட்டுக்கு அடுப்பு எரிக்க பயன்படுத்துகிறார். இதில் வரும் மீதேன் வாயுவை சில மணி நேரம் மஞ்சள் கிழங்கு சேமித்து வைக்கப்படும் அறைக்குள் விடுகிறார். இந்த அறைக்குள் உள்ள மஞ்சள் கிழங்குகள் தார் பாய் கொண்டு காற்று புகாமல் மூடி வைக்கப்பட்டுள்ளதால்

மீதேன் வாயுக்கு பூச்சிகள் இறந்து விடும். மீதேன் வாயு ஈரப்பதத்தை போக்க சிலிக்கா ஜெல் பயன்படுத்துகிறார்.

தொல்லுயிர் பாக்டீரியா கலவை தயாரித்தல்

காற்றுப் புகாத 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட ஒரு காலி டிரம்மில் (நெஸ்லே கம்பெனிடிரம்) 5 கிலோ சாணம், வெல்லம் 1/4 கிலோ , கடுக்காய் தூள் 25 கிராம் , அதிமதுர தூள் 25 கிராம் , பப்பாளி 3 கிலோ , இவை அனைத்தையும் கலந்து விட வேண்டும். பின்னர் காற்றுபுகாமல் மூடி வைத்து மூடி விட வேண்டும். இதனை 10 நாட்கள் அப்படியே வைத்து விட வேண்டும். முதல் 2 நாட்கள் ட்டிரம் உப்ப ஆரம்பிக்கும். அப்பொழுது மூடியை திறந்து விட வேண்டும். இதனால் வாயு வெளியேறும் . பின்னர் மூடியால் இறுக மூடி விட வேண்டும். 10 நாட்கள் கழித்து இந்த கரைசலை நுகர்ந்து பார்த்தால் வாசனை இருக்காது. இதிலிருந்து 1 லிட்டர் கரைசல் எடுத்து 10 லிட்டர் நீருடன் கலந்து பயிருக்கு தெளிக்கலாம் அல்லது நீர்பாய்ச்சும் நீருடன் கலந்து விடலாம். இதனால் மண்ணில் உள்ள நுண்ணுயிரிகள் பெருகும். இதன் மூலம் வளரும் பயிர்களின் இலையின் அகலம் கூடும் இதனால் ஒளிச்சேர்க்கை அதிக அளவில் நடைபெறும். வேர்கள் வளர்ச்சியும் அதிகரிக்கும். இக்கரைசலை கொண்டு குப்பையை விரைவில் மட்க வைத்து கம்போஸ்ட்டும் தயார் செய்யலாம். இந்த தொல்லுயிர் பாக்டீரியா தயாரிக்கும் முறையை இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வாரின் சகோதரர் பால கிருஷ்ணனிடமிருந்து கற்றுக் கொண்டார்.

உரமிடாமல் மண்வளம் உற்பத்தியை கூட்டுதல்

மண்ணின் வளத்தை இயற்கையான முறையில் வைத்துக் கொள்ள பல வழிகள் உள்ளன. ம ஹாராஷ்டரா மாநில இயற்கை வேளாண்மை விஞ்ஞானி டபோல்கர் உத்தி மூலம் குறைந்த இடத்தில் அதிக வருமானம் பெறுதல் அல்லது டபிள் டிக்கிங் (double digging method) என்று சொல்லப்படும் முறை (ஓரிடத்தில் பயிர் செய்தால் அடுத்த தடவை அந்த இடத்தை பயிரிடாமல் குப்பையை மக்கவிடுதல்) போன்ற வழிகள் கூறப்படுகின்றன. இதற்கு சுந்தரராமன் தனது பண்ணையில் தென்னை மரத்து இடைவெளியில் 10 சென்ட் கொண்ட பிளாட்டுகள் 2 வைத்து காய்கறி சாகுபடி செய்கிறார். முதல் பிளாட் (10 சென்ட் நிலம்) டில் காய்கறி பயிர் செய்யும் சமயம் அடுத்த பிளாட்டில் சணப்பு தக்கைப்பூடு பயிர் செய்கிறார். இந்த பசுந்தாள் உரச் செடியை 45 நாளில் கிளறி நிலத்திலேயே மண்ணுக்குள் புதைத்து விடுகிறார். இதே பிளாட்டில் 2 வது தடவை தக்கைப்பூண்டு, சணப்பு விதைத்து மீண்டும் 45 வது நாளில் கொத்தி மண்ணிற்குள் சேர்த்து விடுகிறார். பின்னர் இதில் காய்கறி செடி சாகுபடி செய்கிறார். ஒரு பாத்தியில் காய்கறி செடி பயிரிடப்படும் சமயம் அடுத்த பாத்தியில் சணப்பு / தக்கைப்பூடு சாகுபடி செய்யப்படுகிறது. இதனால் எந்த உரமும் இடாமல் மண்வளம் பாதுகாக்கப்படுகிறது. பயிர் விளைச்சலிலும் குறைவில்லா மகசூல் கிடைக்கிறது.

அமிர்த கரைசல் தயாரித்தல்

ஒரு 15 லிட்டர் கொள்ளளவு கொண்ட பிளாஸ்டிக் ட்ரம்மில் 1 கிலோ சாணம் , 1 லிட்டர் மாட்டு கோமியம் , 250 கிராம் வெல்லம் , கெட்டு போன பழங்கள் 1 கிலோ (பப்பாளி மற்றும் பிற பழங்கள்) , 10 லிட்டர் நீர் சேர்த்து நன்கு கலக்க வேண்டும். பின்னர் இதனை மூடி விட வேண்டும். இதனை 5 நாட்கள் வரை புளிக்க விட வேண்டும். இதிலிருந்து 500 மி.லி கரைசல் எடுத்து 10 லிட்டர் நீரில் கலந்து 2–4 வார இடைவெளியில் பயிருக்கு தெளிக்கலாம் அல்லது நீர் பாய்ச்சும் நீரில் கலந்து விடலாம். இவரது பண்ணையை பார்க்க வந்த தமிழ் நாடு , கேரளா , கர்நாடகா விவசாயிகள் சுமார் 3,000 நபர்கள் இம்முறையை கடைபிடித்து வருகின்றனர்.

பயிர் , மண் பாதுகாப்பு திரவம்

தற்பொழுது உள்ள ஆள் பற்றாக்குறையினாலும் , மின்சாரம் ஒழுங்காக கிடைக்காதலாலும் ஓர் எளிய முறையை கையாண்டுள்ளார். இதன் படி ஒரு சிமெண்ட் தொட்டி (12’ x 5’ x 3’) கட்டி அதில் 3 அங்குலம் ஜல்லி பரப்பி அதன் மேல் மணல் 3/4 அடி இடை வேண்டும். இதற்கு மேல் காய்ந்த இலை , குச்சிகள் 1/2 அடி உயரம் நிரப்ப வேண்டும். இதில் நீர் நிரப்ப வேண்டும். இந்த தொட்டியில் மேல் புறத்தில் படத்தில் காட்டியவாறு அமிர்த கரைசல் , தொல்லுயிர் கரைசல் , பஞ்சகவ்யா , நுண்ணுயிர் கலவை (ரைசோபியம் , அசோஸ்பைரில்லம், அசட்டோபேக்டர் மற்றும் ட்ரைக்கோடெர்மா, பேசில்லஸ் , மெட்டாரைஸம் ஒவ்வொன்றும் 1/2 கிலோ) சாக்கில் கட்டி தொங்க விட வேண்டும். இதிலிருந்து வடியும் சாறு தொட்டியில் விழும். இதனை 7 நாட்கள் புளிக்க விட வேண்டும். பின்னர் தொட்டியின் அடி பாகத்தில் உள்ள குழாயை பாசன தண்ணீருடன் கலக்குமாறு திறந்து விட வேண்டும். இது சொட்டு நீர் செல்லும் குழாயுடன் இணைக்கப்பட்டுள்ளதால் வேர் பாகத்திற்கு இந்த நீர் சென்று விடும். இதனால் நீரின் தன்மையும் மாறும் அதாவது நல்ல நீராக மாறும். வேர் புழுக்களை அழிக்கும். பயிர்களுக்கு பூச்சி , நோய் எதிர்ப்பு சக்தியை கூட்டும்.

வேலையாட்களை குறைக்கும். இந்த முறையை பார்த்து திரு.சத்தீஸ், கணபதிபாளையம் , திருமதி பார்வதி , பள்ளதோட்டம், டாக்டர் இராஜமாணிக்கம், கோபி, திரு ஞானசம்பந்தன், கோபி ஆகியோர் கடைபிடித்து வருகின்றனர்.

மூலிகை பூச்சி கொல்லி மருந்து தயார் செய்தல்

வேப்பிலை, நொச்சிஇலை, சோற்றுக்கற்றாலை, சீத்தாஇலை, துளசிஇலை, திருநீற்று பச்சிலை, ஊஞ்சல்மரத்தழை (உசிலைதழை) அனைத்தும் சேர்த்து 2 கிலோ எடுக்க வேண்டும். இதனை அரைக்க வேண்டும் . இத்துடன் மோர் 10 லிட்டர், மஞ்சள் தூள் 100 கிராம், பெருங்காயம் 20 கிராம் சேர்த்து 2 நாட்கள் புளிக்க விட வேண்டும். இது பல பயிர் நோய்களை கட்டுப்படுத்தும் . இந்த கரைசலை கொண்டு 200 லிட்டர் நீரில் கலந்து திராட்சைக்கு தெளித்தால் சாம்பல் நோய் கட்டுப்படும். பிற பயிர்களுக்கும் தெளிக்கலாம். இதில் மோருக்கு பதிலாக மாட்டு கோமியம் சேர்த்தால் பூச்சி கொல்லியாக பயன்படுத்தலாம். இந்த கரைசலுடன் 1 லிட்டர் இளநீர் சேர்ந்து தெளிப்பதால் பயிர் வளர்ச்சி கூடும்.

மக்காச்சோளம் சாகுபடியில் வருமானம்

இவர் மக்காச்சோளத்தை சென்ற வருடம் மார்கழியில் விதைத்தார். இவர் ஏக்கருக்கு 8 கிலோ ஒட்டு ரக மக்காச்சோள விதையை (தனியார் கம்பெனியிலிருந்து வாங்கப்பட்டது) விதைத்தார். 3 x 2 x 1 அடி இடைவெளியில் ஊன்றினார். சொட்டு நீர் பாசனம் கடைபிடிக்கப்பட்டது. மேலே கூறியபடி தொட்டி மூலம் இயற்கை உர நீர் கொடுக்கப்பட்டது. 2 ஏக்கரில் இது அறுவடைக்கு வந்தது. 65 குவிண்டால் கிடைத்தது. இவருக்கு சாகுபடி செலவு ரூ. 62,000 ஆனாது. இவர் 65 குவிண்டால் மக்காச்சோளத்தை ரூ. 1500 வீதம் விற்றதில் ரூ. 97,500 மொத்த வருமானம் கிடைத்தது. நிகர இலாபம் ரூ. 30,000 அல்லது ஏக்கருக்கு ரூ. 15,000 கிடைத்தது (3 மாதங்களில்) . இவர் ஒவ்வொரு பட்டத்திலும் பயிர் வாரியாக செய்த செலவு வந்த வருமானம் ஒவ்வொன்றையும் அன்றாட கணக்கு நோட்டில் பதிவு செய்து வருகிறார்.

மரப்பயிர் செய்து வருமானம் பெறுதல்

இவர் தனது தோட்டத்தில் மலை வேம்பு , சவுக்கு, பீநாரி, போன்ற விரைவாக வளரும் மரங்களை பயிர் செய்து 3–5 வருடங்களில் நல்ல விலைக்கு விற்று விடுகிறார். சில பாத்திகளில் ஒட்டு ரக மக்காச்சோள விதையை பயிர் செய்து பால் பிடிக்கும் பருவத்தில் அறுத்து பசு மாடுகளுக்கு தீவனமாக கொடுக்கிறார்.

இவர் தனது பண்ணையில் வாழை, கரும்பு, காய்கறி பயிர் சாகுபடியை இயற்கை முறையில் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக கடைபிடித்து வருகிறார். இவர் உழவர்களுக்கு இயற்கை வேளாண்மை பயிற்சி அளித்து வருகிறார். 3000 க்கும் மேற்ப்பட்ட உழவர்கள் இவரிடம் பயிற்சி எடுத்து கடைப்பிடித்து வருகின்றனர். இதனை பாராட்டி மதுரையிலுள்ள தானம் அறக்கட்டளை 2014 க்கான சமூக மேம்பாட்டுப் சாதனையாளர் விருதை 2.10.2014 அன்று வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

திரு. சுந்தரராமன்
கோம்புபள்ளம் தோட்டம்
கெஞ்சனூர் வழி
சத்தியமங்கலம்
ஈரோடு மாவட்டம் – 638 401
தொலைபேசி – 04295 – 225047
செல் : 9842724778

பந்தியில் குடிநீர் ஊற்ற சிறிய நீர் வண்டி

பஞ்சாப்பில் அறிவைத்தேடும் நடை பயணத்தின் போது புஸவால் என்ற ஊரில் யாத்ரிகர்களுக்கு பந்தியில் உணவு பரிமாறும் சமயம் ஒவ்வொருவருக்கும் அவரவர் டம்ளரில் நீர் ஊற்ற ஒரு புதிய கருவி பயன்படுத்தப் படுகிறது. இந்த கருவியில் ஓர் அண்டாவில் நீர் நிரப்பபட்டுஅதிலிருந்துகிளட்ச்மாடலில் கிளட்சைப் பிடித்தால் நீர் வெளிவரும். கிளட்சை விட்டுவிட்டால் நீர் வரத்து நின்று விடும். இந்த நீர்வீடும் கருவியானது 4 சக்கரங்கள் கொண்ட தள்ளு வண்டியில் அமைக்கப்பட்டுள்ளது.

மீனுக்கு விடுமுறை மீனவனுக்கு நண்பன்

திரு. பீட்டர் அவர்கள் 1957 ம் ஆண்டு டிசம்பர் மாதம் கேரள மாநிலம் திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள வலியவேலி என்னும் மீனவர் கிராமத்தில் பிறந்தவர். இவரது தந்தை திரு தாமஸ் ஒரு கட்டு மர மீனவர், தாய் மீன் வியாபாரம் செய்வார். பீட்டர் மெட்ரிக்குலேசன் வரை படித்தவர். அதற்கு மேல் படிப்பில் கவனம் செலுத்த இயலாமல் பொது நலப் பிரச்சனைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

திரு.பீட்டர் அவர்கள் இளம் வயதிலிருந்தே பொது நோக்குடையவராகத் திகழ்ந்தார். அநீதிகளைக் கண்டு பொறுத்துப் போகும் பலரைப் போல் சாதாரணன் அல்லர். இயல்பாகவே அநீதிகளைக் கண்டு பொங்கியெழும் போர்க்குணம் கொண்டவர். இவரது முதல் போராட்டமானது 1980 ல் தொடங்குகிறது.

இஸ்ரோ (ISRO) வால் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு முறையாக ஈடு வழங்கவில்லை என்ற பிரச்சனையில் தலையிட்டு விடிவு தேடித்தந்த சம்பவம் தான் இவரது பொது நல நடவடிக்கையின் முதல் அனுபவம். இதனைத் தொடர்ந்து இன்னும் சில இளைஞர்களை இணைத்துக் கொண்டு வேலி மக்கள் நல சங்கம் என்னும் அமைப்பை ஏற்படுத்திக் கொண்டு பொது வேலைகளில் ஈடுபட்டு வந்தார். இந்த உள்ளூர் அமைப்பின் மூலம் இளைஞர்களை பொது சேவையில் ஈடுபடுத்தியதோடு ஊர்ப் பொது வேலைகள் அனைத்தும் மேற்கொண்டார்.

1980 ல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் பொய் வாக்குறுதி கொடுக்கும் அரசியல்வாதிகளின் நடவடிக்கையைக் கடிந்து தேர்தல் பகிஸ்காரம் செய்யும் படி மக்களிடத்தே இவரும் இவரது சங்கப் பிரதிநிதிகளும் கருத்துப் பிரச்சாரம் செய்தனர். இதனால் அந்தத் தேர்தலில் 12 சதவீதம் ஓட்டுகள் குறைவாக பதிவாயின. அடுத்து நடந்த சட்டமன்றத் தேர்தலில் அரசியல் கட்சிகள் இவரது சங்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தியதன் வாயிலாக அனைவரும் தேர்தலில் பங்கு பெற்றனர். ஆனால் அதற்கு கைமாறாக அவ்வூரில் உள்ள அனைவருக்கும் குடிநீர் வசதி. சுகாதார வசதி மற்றும் வீட்டு வசதிகள் உறுதியாயின. இந்த அனுபவங்கள் திரு. பீட்டர் அவர்களை மீனவர்களது நலனுக்காக பெரிய அளவில் போராடத் தூண்டியது எனலாம்.

1980 களில் மீனவர் சங்கங்களின் தலைவராக இருந்த கிருத்தவ பாதிரியார் தாமஸ் கொச்சேரி அவர்களுடன் நெருங்கிப் பழகினார். அவரோடு கேரளா மற்றும் தென் தமிழ் நாட்டின் கடற்புறங்களில் உள்ள மீனவர் கிராமங்களில் பணி செய்து அனுபவம் பெற்றார். நாளடைவில் மீனவர்களின் நலனுக்காக முழு நேரமாக உழைக்கலானார். 1980 களின் பின் பகுதியில் Kerala Swathanthra Malsythozhilali (KSMTF) என்னும் மீனவத் தொழிலாளர்களுக்கான சங்கத்தை ஏற்படுத்தியதில் திரு. பீட்டர் அவர்கள் பெரும் பங்கு வகித்தார்.

இந்த கேரளா சுதந்திர மீனவத் தொழிலாளர் கூட்டமைப்பு (KSMTF) அடித்தள மீனவ சமூகத்தின் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட அமைப்பு. இந்த அமைப்பை உருவாக்கியதிலிருந்து அதன் வளர்ச்சிக்குப் பாடுபட்ட திரு. பீட்டர் அவர்கள் இந்நிறுவனத்தை சுறுசுறுப்பாக இயங்கச் செய்வதில் பெரும்பங்காற்றினார். இன்று வரை இந்த KSMTF நிறுவனமானது 25000க்கும் மேற்பட்ட மீனவர்களை உள்ளடக்கிய நிறுவனமாக விளங்குகிறது. உள்ளூர் பிரச்சனைகள் முதல் அரசுக்கொள்கை மாற்றம் சம்பந்தப்பட்ட பெரிய பிரச்சனைகள் அனைத்திலும் இந்த KSMTF திறம்படச் செயல்பட்டு வருகிறது. இதற்கு முக்கியக் காரணமாக அமைந்தது திரு. பீட்டர் அவர்களின் தலைமையும் அவரது அயராத உழைப்பும் தான்.

KSMTF கேரளக் கடல் பகுதிகளில் மீன்பிடி விடுமுறை காலங்கள் அனுசரிக்கப்படுதல் வேண்டும் என்று வலியுறுத்தியது. 1980 களின் முற்பகுதியில் தொடங்கிய இந்த கருத்து பல போராட்டங்களுக்குப் பின்பு 1987ல் அமுலுக்கு வந்தது. அதன்படி கேரள மாநிலத்தில் ஜூன் 15 முதல் ஜூலை 31 வரையிலான 45 நாட்களுக்கு டிராலர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல தடைவிதிக்கப்பட்டது. இந்த காலகட்டமானது மீன் இனப்பெருக்கத்திற்கு உகந்த காலம் என்பதால் இந்த சட்டத்தை அமுல்படுத்த KSMTF மக்கள் போராட்டத்தை கையிலெடுத்து வெற்றி பெற்றது. இது இந்தியாவிலேயே ஒரு முன்னோடி செயல்பாடாகக் கருதப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழகம் உள்ளிட்ட பிற கடற்கரை மாநிலங்கள் இந்த 45 நாள் மீன்பிடி விடுமுறையைப் பின்பற்றலாயின. இந்தப் போராட்டத்தினால் கிடைத்த வெற்றியானது திரு.பீட்டர் அவர்களுக்கும் அவரது

சகாக்களுக்கும் பெரும் ஊக்கத்தை அளித்தது எனலாம். இந்தச் சாதனை அவ்வளவு எளிதாகக் கிட்டியது அல்ல. மிகப்பெரும் வெகுஜனப் போராட்டங்கள் நடந்து. ரயில் மறியல். பஸ்மறியல் , விமான மறியல் என பல்வேறு வகையான போராட்டங்களின் வாயிலாக கிடைத்தது தான் இந்த மீன் விடுமுறைக் காலங்களில் டிராலர் மீன் பிடிக்கத் தடை வாங்கியது.

திரு. பீட்டர் முன்னின்று நடத்திய பிற போராட்டங்களில் மணல் காண்ட்ராக்டர்களுக்கு எதிராக நடத்திய மக்கள் போராட்டம் மிகப் பிரசித்தி பெற்றவை. கேரள கடற்கரை மணலை அள்ளுவதற்குக் காண்ட்ராக்ட் எடுத்து மணல் மாஃபியாக்கள் வரம்பு மீறி கடற்கரை மணலை எடுத்த தன் வாயிலாக மிகப்பெரும் மண் அரிமானம் ஏற்படலாயிற்று. இதனால் மீனவக் கிராமங்கள் பெரிதும் பாதிப்புக்குள்ளாயின. இதை எதிர்த்து திரு. பீட்டர் அவர்கள் பொது மக்களை தட்டி எழுப்பினார். KSMTF களத்தில் இறங்கியது. லட்சக்கணக்கான மக்கள் பங்கு பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டம் அது . இரண்டாண்டுகள் நீடித்த இப்போராட்டம் இறுதியில் வெற்றி கண்டது. இந்த மாநில அளவில் வோராட்டங்களால் KSMTF க்கு நல்லதொரு அறிமுகம் கிடைத்தது. நற்பெயர் கிட்டியது. இதனால் பொது மக்களின் பங்கேற்பு அதிகரிக்கலாயிற்று.

இது கேரள மீனவர் சரித்திரத்தில் மிக முக்கிய நிகழ்வு . தொடந்து 12 ஆண்டுகள் ரிஷிவிஜிதி ன் தலைமைப் பொறுப்பை செவ்வனே செய்து வந்த திரு. பிட்டர் அவர்கள் 2001 களில் தேசிய மீனவத் தொழிலாளர்களின் அமைப்பிற்கு (National Fishworker Forum) செயலாளர் பொறுப்பை ஏற்று இன்று வரை அப்பொறுப்பை செவ்வனே செய்து வருகின்றார். மீனவ சமூகத்தை பாதிக்கக் கூடிய அரசின் கொள்கை முடிவுகளை எதிர்த்து தொடர்ந்து போராடி வருகின்றார். இதனிடையே பாதிரியார் தாமஸ் கொச்சேரி மற்றும் பிற முக்கியஸ்தர்களின் துணையோடு மீனவ மக்களுக்கான உலக அமைப்பை (World Forum of Fisher People (WFFP) நிறுவினார். இதன் மூலம் உலகில் பல்வேறு மீனவ தேசங்களுக்குப் பயணம் செய்து வேண்டிய அனுபவம் பெற்றார். குறிப்பாக கென்யா, செனகல் , தாய்லாந்து, இலங்கை மற்றும் பிரான்ஸ் போன்ற நாடுகளுக்குச் சென்று இத்துறை சம்பந்தமான அறிவும் அனுபவமும் பெற்றார்.

காலப்போக்கில் அரசியல் கட்சிகள் அரசு நிறுவனங்கள் மற்றும் பத்திரிக்கைத் துறையினரோடு நல்ல தொடர்பை ஏற்படுததிக் கொண்டார். இத்தொடர்புகளினால் மீனவ சமூகத்தின் மேம்பாட்டிற்கும் நலனுக்கும் உகந்த சூழலை ஏற்படுத்தினார். மேலும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நலனுக்காக பாடுபட்டார். அதற்காக தேசிய தொழிலாளர் மையத்துடன் (National Centre for Labour - NCL) நெருங்கிப் பணியாற்றினார்.

(KSMTF) அமைப்பின் வாயிலாக பல சாதனைகளைப் புரிந்த திரு. பீட்டர் அவர்கள் இந்நிறுவத்தை வலுப்படுத்துவதில் இன்றும் அயராது பாடுபட்டு வருகின்றார். இவருக்கு இந்த அளவு வேகத்தைக் கொடுக்கும் காரணி எது என்று கேட்பவர்களிடம் இவர் சொல்லும் பதில் ''ஒப்புடைமை'' (Committment) என்பது தான் இந்த மீனவ சமூக நலனில் அக்கறையும் ஈடுபாடும் கொண்டு செயல்படுவதால் இன்னும் இளமையோடும் துடிப்போடும் ஒரு நாளைக்கு பதினைந்து மணிநேரம் மக்களுக்காகப் பணியாற்றி வருகிறார். இதனால் திரு. பீட்டர் அவர்களின் பங்களிப்பு கேரளத்தில் உள்ள ஒட்டு மொத்த மீனவ குடும்பங்களுக்கும் பரீட்சயம் ஆனது. அரசத்துறை , காவல்துறை, பத்திரிக்கைத்துறை போன்றவற்றில் இவர் மிகவும் பிரபல்யம் ஆனவராக உள்ளார்.

திரு. பீட்டர் அவர்களின் குடும்பம் மிகச் சிறியது. தனது மனம்போல் அமைந்த மனைவி மற்றும் ஒரே மகள். மகளைத் திருமணம் செய்து கொடுத்தாகிவிட்டது. மனைவி திருமதி. மேகலைன் இவரைப் போன்றே பொது நோக்குடைய போராளியாவார். இவர் மீன் வியாபாரம் செய்து பிழைக்கும் மீனவப் பெண்களின் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டு வருகிறார். ஆக. இவரது குடும்பமே மீனவ சமூகத்திற்காக அயராது உழைக்கும் நிலையில் உள்ளது குறிப்பிடத்தக்கது. பொதுப்பணியில் பொது மக்களைத் திரட்டி மிகப்பெரும் மாற்றங்களுக்கு வித்திட்டுவரும் திரு. பீட்டர் அவர்கள் எந்தவொரு அரசியல் கட்சி சார்பு நிலை எடுத்ததில்லை. ஆனால் இவரது செயல்பாட்டைப் பாராட்டி கேரளத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும் இவருக்குஆதரவு தெரிவித்து வருகின்றன. கேரள மீனவ சமூகத்தினரால் பெரிதும் பாராட்டப்படும் திரு. பீட்டர் அவர்கள் தனது 57 வயதைக் கடந்த இளைஞராக அயராது உழைத்து வருவது ஒரு மிகப்பெரும் விந்தை எனலாம். இவருக்கு தேசிய அளவில் ஆன மீனவ அமைப்புக்களோடு நல்ல தொடர்பு உண்டு. தேசிய அளவிலான கொள்கை வகுப்புகளில் திரு. பீட்டர் அவர்களின் கருத்துப் பிரதிபலித்து வருகின்றது.

மேலும் 60 வயதிற்கு மேற்பட்ட மீனவர்களுக்கு மாதாந்திரப் பென்சன் கிடைக்கச் செய்ததில் இவரது

நிறுவனத்திற்குப் பெரும்பங்குண்டு. வெளிநாட்டு டிராலர்கள் தமது கடல் பகுதியில் வந்து ஆழ்கடல் மீன் பிடி தொழில் செய்வதைத் தடுத்து நிறுத்தப் போராடியவர்.

இவரது (KSMTF) அமைப்பின் பணியானது கேரளத்தில் உள்ள 9 கடற்கரை மாவட்டங்களிலும் உள்ளது. 25000 மீனவக் குடும்பங்கள் உறுப்பினராக இருந்த போதிலும் போராட்டம் என்று வந்து விட்டால் பல்லாயிரக்கணக்கானோர். பங்கேற்பது வழக்கமாக உள்ளது. ஆக இவர்களது செயல்பாடானது பொது மக்களைப் பாதிக்கக் கூடிய முக்கியப் பிரச்சனைகளில் தலையிடுவதால் பெருவாரியான பொது மக்கள் இந்த போட்டங்களில் கலந்து கொண்டு ஆதரவு அளிக்கின்றனர்.

திரு. பீட்டர் அவர்கள் ஒரு சிறந்த பத்திரிக்கையாளரும் கூட 2002 ல் அலைகள் (waves) என்னும் மலையாள இதழை ஆரம்பித்து (மாதமிருமுறை) அதன் ஆசிரியராக இன்றும் பணியாற்றி வருகிறார்.

மேலும் தேசிய அளவில் சமூக நலனுக்காக போராடி வரும் முக்கிய பிரமுகர்களான மேத்தா பட்கர். அருணா ராய். அருந்ததி மறைந்த ஹரே கிருஷ்ணாதேபநாத் மற்றும் சி.ரி. ஜெயின் போன்றோர்களுடன் பழகும் வாய்ப்புப் பெற்றவர்.

மீனவர்களது செய்தியை மட்டுமே முழுமையாக ஒலிபரப்பக்கூடிய ''அலைகள் வானொலி'' என்னும் சமூக வானொலியை நிறுவி அதனை சிறந்த செயல்பாட்டிற்கு கொண்டு வந்தது இவரது சாதனைகளில் ஒன்று எனலாம். மீனவர்களது பிரச்சனை வெளிக் கொண்டு வரும் விதமாக சில ஆவணப் படங்களை தயாரித்து வெளியிட்டது. இவரது பங்களிப்பில் குறிப்பிடத்தக்கது.

ஒரு தனிநபரின் உணர்வும் உழைப்பும் ஒரு அடித்தள சமூகத்தையே தட்டியெழுப்ப முடிகிறதென்றால் அதற்கு நல்ல உதாரணம் திரு. பீட்டர் அவர்களே. மீனவ மக்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்கவும் , கடல்வளத்தைப் பாதுகாக்கவும் பெரிய அளவில் மீனவ சமூகத்தைத் தட்டியெழுப்பிய பெருமை இவரையே சாரும். மீனவ சமூகத்திற்கும் மீன்வளத்துறைக்கும் திரு. பீட்டர் அளித்துள்ள பங்களிப்பு குறிப்பிடும் படியானவை. இன்றும் சிறிதும் அயராமல் உற்சாகத்தேடும். ஆழ்ந்த ஈடுபாட்டோடும் சமூகப் பணியாற்றி வரும் திரு. பீட்டர் அவர்களை மதுரையிலுள்ள தானம் அறக்கட்டளை 2014 க்கான சமூக மேம்பாட்டுப் சாதனையாளர் விருதை 2.10.2014 அன்று வழங்கி கௌரவப்படுத்தியுள்ளது.

Mr. T. Peter
National Secretary
Tutors Lane, Statue, Trivandrum
Mob : 09744259831, peter.ksmtf@gmail.com

பண்ணைக்குட்டை மூலம் நீரின் தரத்தை உயர்த்துதல்

பொதுவாக பண்ணைக் குட்டைகள் நம் முடைய தோட்டத்தில் தாழ்வான பகுதியில் அமைக்கப்படுகின்றது. அப்போது தான் நம்முடைய வயலின் அனைத்து தண்ணீரும் மழை காலத்தில் அங்கு வந்து சேர முடியும். சாதாரணமாக நாம் நம் முன்னோர்கள் அனைவரும் மேடான பகுதியில் கிணற்றை அமைப்பார்கள். அப்போது தான் மற்ற அனைத்து பகுதிகளுக்கும் வாய்க்கால் மூலம் தண்ணீர் பாய்ச்ச ஏதுவாக இருக்கும். இதை கிணற்றில் உள்ள மோட்டார் மூலம் கிணற்றுத் தண்ணீரைக் குட்டைக்கு அனுப்பி மறுபடியும் மோட்டாரை ''ஆப்'' செய்தவுடன் சய்பன் சிஷ்டம் மூலம் கிணற்றுக்கு வந்து விடும். இதனால் கிணற்று கல் கட்டிடத்திற்கு எந்த சேதமும் இல்லை. இரண்டாவதாக எந்த தண்ணீர் பாய்ச்சும் பைப் சிஷ்ட்டத்தையும் மாற்ற வேண்டியது இல்லை. இதை விட மழைத் தண்ணீரை பாதுகாப்புடன் கிணற்றுக்கு மாற்றுவதால் உப்பு நீர் தன்மை மாறி நம் கிணற்று நீர் நன்நீராக உதவுகின்றது. இது பல தடவை சோதனை செய்து பார்க்கப்பட்ட முடிவாகும்.

இந்த மாடலில் நகர ''கழிவு'' தண்ணீர் அனைத்தையும் ''உர''மாக மாற்ற முடியும்.

ஜே.ஆர் தன்ராஜ்
பெரியப்புகாடு,கல்குறிச்சி
பெளுகுறிச்சி வழி,நாமக்கல் மாவட்டம் – 637 402
தொலைபேசி – 04286–246668

கோழிக்கு சோற்றுக்கற்றாழை ஊறிய குடிநீர்

கென்யா தேசத்தில் நெய்ரோபிக்கு அருகாமையில் கிடுளி கிராமத்தில் லிலன் முசியேகா என்ற பெண்மணி வசித்துவருகிறார். இவரது கணவர் நெய்ரோபி நகரில் வேலை செய்வதால் இவர் தனது 2 ஏக்கர் நிலத்தில் பாடுபட்டு மக்காச்சோளம் சாகுபடி செய்வார். இதில் கிடைக்கும் 9 குவிண்டால் மக்காச்சோளத்தின் மூலம் ரூ. 20,000 வருமானம் எடுப்பார். இவரது பண்ணைக்கு சென்றிருக்கும் சமயம் இவரது வீட்டிற்கு அருகே கோழிகளுக்கு நீர் குடிக்க சிறு உளமுடிகளை தரையில்

பதித்து நீர் விடுகிறார். இதில் நித்தமும் சோற்றுக்கற்றாழை மடலை சில துண்டுகளாக நறுக்கி போடுகிறார். இதனால் சோற்றுக்கற்றாழை சாறு நீரில் கலந்து விடும். இந்த நீரைப் பருகும் கோழிகள் சளிப்பிரச்சனைக்கு இலக்காகது என்று இப்பகுதியில் பல விவசாயிகள் இதனை கடைபிடித்து வருவதாகக் கூறப்படுகிறது.

தகவல் : ஓர்ஸான் ஸ்காட்

தேனீ – 25 (1) ஜனவரி – மார்ச் – 2014

நீண்ட நாட்கள் வாழ இரகசியம்

பாயிபென் ராமசந்தரஜி என்ற பெண்மணி 100 வயதிற்கு மேல் குஜராத்தில் பனஸ்கந்தா மாவட்டத்திலுள்ள வரன் என்ற கிராமத்தில் வசித்து வருகிறார். இவருடைய பெற்றோர் இவர் இளம் வயதிலேயே காலமாகிவிட தனது சகோதிரிகளை பராமரித்து வந்தார். 15 வயதில் திருமணமாகி 7 பிள்ளைகளைப் பெற்றார். இவருக்கு மானாவாரி நிலம் உள்ளது. பகல் முழுதும் பண்ணை வேலையைப்பார்த்து விட்டு மாலையில் கணவருடனும் குழந்தைகளுடனும் உணவு அருந்துவது தனது உடல் களைப்பை நீக்கியதாகக் கூறுகிறார். பின் நல்ல உறக்கம், நீண்ட நாட்கள் வாழ யாருக்கும் எந்த தீங்கும் செய்யாமல் மற்றவர்களுக்கு கூடுமானவரை உதவ வேண்டும். யாரிடமும் பொறாமை குணமும் கோபமும் கூடாது. இவ்வாறு இருப்பவர்களுக்கு இறைவனின் ஆசிர்வாதம் கிடைக்கும் என்று கூறுகிறார். இவர் பால் , வாழைப்பழம், வில்வப்பழம் , மைதா கலந்து தயார் செய்யப்படும் மார்புவா என்ற உணவைத் தயார் செய்து விரும்பி உண்பதாகக் கூறுகிறார்.

தகவல் : செல்லிசிங், மற்றும் விசேஷ் சர்மா

தேனீ – 25 (1)

வாசகர் வட்டம்

இயற்கை வேளாண்மையில் பயிர் வளர்ச்சி

நான் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேல் இயற்கை வேளாண்மைக்கு தேவையான பஞ்சகவ்யா , இயற்கை மூலிகை பூச்சி கொல்லி மருந்து தயார் செய்து விற்பனை செய்து வருகிறேன். என்னுடைய 2 ஏக்கர் தோட்டத்திலும் மஞ்சள் , மக்காசோளம் சாகுபடி செய்து வருகிறேன். தற்சமயம் மக்காசோளம் விதை நட்டு 50 நாட்கள் ஆகின்றன. பயிர் சுமார் 7 அடி உயரம் வளர்ந்துவிட்டது. ஆனால் பக்கத்து தோட்ட விவசாயிகள் யூரியா உரத்தை மும்முறை போட்டும் 5 அடி தான் வளர்ந்துள்ளது. நான் இது வரை 6 முறை பஞ்சகவ்யா , இயற்கை பூச்சி கொல்லி மருந்து மாறி மாறி தெளித்துள்ளேன் (3 முறை பஞ்சகவ்யா + 3 முறை இயற்கை பூச்சி கொல்லி மருந்து) . சென்ற வருடம் மஞ்சளில் ஊடு பயிராக நாட்டு சோளம் பயிர் செய்தேன் . கதிர்கள் திடமாக இருந்தன. இந்த சோளத்தை ஈரோட்டில் விற்பனை செய்த போது சோளம் மூடைக்கு 120 கிலோ எடை இருந்தது. மற்ற விவசாயிகளின் மூடைக்கு 94 கிலோ அளவு இருந்தது.

நான் பல விவசாயிகளுக்கு பஞ்சகவ்யா மற்றும் பூச்சி கொல்லி மருந்து விற்பனைக்கு கொடுத்து வருகிறேன். ஒரு லிட்டர் விலை ரூ. 100 க்கு கொடுத்து வருகிறேன்.

செல்லமுத்து

கருக்கம் பாளையம் , ஊஞ்சலூர் வழி

ஈரோடு மாவட்டம் , செல் : 9486602389

இயற்கை வேளாண்மையும் பசு பராமரிப்பும்

நான் கடந்த நான்கு ஆண்டுகளாக 16 ஏக்கர் நிலத்தில் இயற்கை வழியில் கரும்பு சாகுபடி செய்கிறேன். எனது பண்ணையில் கொய்யா,மாதுளை, அத்தி, நீர் ஆப்பிள் போன்ற பழ மரங்களும் உள்ளன. கிர் பசு மாடுகள் 2 உள்ளன. நித்தமும் 14 லிட்டர் பால் கிடைக்கிறது. பசு மாடுகளை வெள்ளிக்கிழமை குளிப்பாட்டி கால் பகுதியில் உப்பு கரைசல் ஊற்றி விடுவேன். கொம்பில் விளக்கெண்ணெய் தடவுவேன். தை பொங்கல் அன்று மட்டும் ஒரு கொம்புக்கு சுண்ணாம்பும் மறு கொம்புக்கு செம்மண் சாந்தும் தடவுவேன். இதனால் மாடுகளுக்கு காணை நோய் தாக்காது.

அஜய் கார்த்திக்ராஜா , 57/16 , பி , நரசிம்மாச்சாரி தெரு

தேனி – 636 701

மணமக்கள் வாழ்த்து பாட்டு

கொல்லிமலை பகுதியில் மணமக்கள் முகூர்த்தம் முடிந்த பின்னர் பாரம்பரியமாக பாடப்படும் பாட்டு

“ஆலு போல தளை தளைஞ்சு ஆலு போல தளை தளைஞ்சு
அருகு போல வேர் ஊணி அருகு போல வேர் ஊணி
கல்லிலே நீர் பூத்தாப்பல கல்லிலே நீர் பூத்தாப்பல
கனத்த எரும பாலு கறந்தாப்பல கனத்த எரும பாலு கறந்தாப்பல
நெல்லுல நீர் பூத்தாப்பல நெல்லுல நீர் பூத்தாப்பல
மூங்கி போல தள தளைஞ்சு மூங்போலதளதளைஞ்சு
முறியாத வாந்திரு முறியாத வாந்திரு”

(கொல்லிமலை மக்கள் பாடல்கள் புத்தகம்
,எ.எஸ். சாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை)

2014 ஆம் ஆண்டுக்கான மழை குறிப்புகள்

ஜய வருஷத்திய ஸ்ரீநிவாஸன் பஞ்சாங்கம் (சுத்த திருக்கணித சர்வ முகூர்த்த பஞ்சாங்கம்), கணித்தவர் எம்.வி. நாராயணன் ஸ்ரீ ஹயக்ரீ வன் ஜோதிட நிலையம், சேலம் – 1 (132 பக்கங்கள்).

வெண்பா:

செயவருடந்தன்னிலே செப்புனங்களெல்லாம்
வியனுறவே பைங்கூழ் விளையும் – நயமுடனே
அஃகம் பெரிதா மளவில் சுகம் பெருகும்
வைஃகுவார் மன்னிரிறைமேல்

பொருள்: ஜய வருடத்தில் (2014 – 15) நல்லமழை பொழிந்த வயல்கள் எல்லாம் வளமுற்ற நவதானியங்கள் செழிப்பாக வளர்ந்து பலன் தரும். இவ்வருடத்தில் சந்திரன் ராஜாவாகவும் மந்திரியாகவும் இருப்பதால், காலத்தே மழை பொழிந்து உணவு பொருட்கள் விளைச்சல் அதிகரிக்கும். புயல்காற்றால் பயிர்கள் சேதமடைய வாய்ப்புள்ளது.

மழை அளவை குறிப்பிடும்போது , ஜய ஆண்டிற்கு, திருக்கணிதப்படி சந்திரன் ராஜாவாகவருவதால் இவ்வருடம் மூன்று மரக்கால் (முக்குறுணி) மழை பொழியும். நூறு யோஜனை நீளமும் நூறு யோஜனை அகலமும் (1 யோஜனை = 12.5 கி.மீ.) நூறு யோஜனை ஆழமும் கொண்டதே ஒரு மரக்கால் ஆகும். இது போன்று மூன்று மரக்கால் மழை பொழிந்து இதில் ஐந்தில் ஒரு பங்கு மழை பூமியிலும், பத்தில் மூன்று பங்கு மழை மலைகளிலும், காடுகளிலும், அரைப்பங்கு மழை சமுத்திரத்திலும் பொழியும்.

மாதவாரியாக மழையளவு

மழையில்லை: ஆனி , புரட்டாசி, கார்த்திகை , தை, மாசி (2014). **குறைந்த மழையளவு :** வைகாசி , ஆவணி , பங்குனி (2015) . **ஓரளவு மழை :** சித்திரை , ஆடி, ஐப்பசி **அதிகமழை :** மார்கழி

நன்றி : மழை முன்னறிவிப்பு கையேடு (2014) – TNAU

இக்னைட் 2013

குஜராத் மாநிலம் காந்தி நகரில் வித்யாதாம் போரு பள்ளியில் 7 வது வகுப்பு படிக்கும் மாணவி சாயாசம்போஜி ஒரு பிரச்சனைக்கு யோசனை கூறினார். அதன்படி பள்ளியில் இந்த யோசனையை செயல்படுத்தியுள்ளனர். மாணவ, மாணவிகள் பல உயரங்களில் இருப்பார்கள். அவர்கள் அனைவருக்கும் ஒரே உயரத்தில் குடி நீர் குழாய்கள் அமைக்கப்படுவதால் இது குட்டையாய் அல்லது நெட்டையான மாணவர்களுக்கு அசௌகரியமாக இருக்கும். சாயாசம்போஜி மாணவியின் யோசனைப்படி குடி நீர் குழாய் சாய்வாக அமைக்கப்பட்டு அனைத்து தரப்பினரும் சௌகரியமாக நீர் குடிக்க முடிகிறது. இந்த மாணவியின் யோசனைக்கு முன்னாள் ஜனாதிபதி டாக்டர் அப்துல் கலாம் அவர்களால் இக்னைட் பரிசு கொடுத்து 2013 ல் 19.2.2014 ல் கௌரவப்படுத்தப்பட்டுள்ளது.

முன்பு



தற்பொழுது

கிரிஷி கீதா (வேளாண்மை பாட்டு)

சுமார் 300 ஆண்டுகளுக்கு முன்னர் சேரமன்னன் ஆண்ட கேரளா தேசத்தில் ''கிரிஷிகீதா'' என்ற விவசாயப்பாட்டை கோவிந்த வாரியார் என்பவர் 17 ம் நூற்றாண்டில் தொகுத்துள்ளார். இந்த கிரிஷிகீதா என்பது முன்பு அவதார புருஷனாக அவதரித்த 6 வது அவதாரமான பரசுராமர் அந்தணர்களுக்கு வேளாண்மை செய்யும் முறைகளை எடுத்துரைத்த கருத்துகளாகும். பரசுராமர் ஜமதக்கனி என்ற முனிவருக்கு புதல்வராக அந்தணர் குடும்பத்தில் தோன்றினார். இவர் தந்தை வைத்திருந்த காமதேனு பசுவைக் கவர்ந்து சென்ற ஓர் அரசன் இவர் தந்தையைக் கொன்று விட்டு சென்று விட்டார். இதனை அறிந்த பரசுராமர் அந்த அரசனைச் சேர்ந்த 21 சத்திரியர்களைக் கொன்றார். பின்னர் சத்திரியர்களைக் கொன்ற பாவப்பிரச்சியத்தமாக பல அந்தணர்களை பாரத தேசத்தின் வட பகுதியிலிருந்து தற்பொழுதுள்ள கேரளா பகுதிக்கு கொண்டு வந்து விவசாய நிலங்களைத் தானமாகக் கொடுத்தார். பின்னர் அந்தணர்களுக்கு வேளாண்மை செய்யும் வழிமுறைகளை முறைப்படி எடுத்து கூறுவதே இந்த கிரிஷிகீதா. பாரததேசத்தின் முதல் வேளாண்மை ஆசான் பரசுராமர் என்று கூறப்படுகிறது. தற்பொழுதுள்ள கேரளா, தமிழ்நாடு, கர்நாடக, மஹாராஷ்டிரா கடற்கரையோரப் பகுதியில் கடல் நீரை உள்வாங்கச் செய்து நிலப்பகுதியை உண்டாக்கி விவசாயம் செய்ய வழி வகுத்தார். கிருஷி கீதத்தில் வெளிநாட்டிலிருந்து தருவிக்கப்பட்ட பயிர்களான மரவள்ளி , ரப்பர், முந்திரி, அன்னாசிபழம், பப்பாளி, டீ, காபி போன்றவற்றைப்பற்றிய குறிப்புகள் இல்லை. இது மலையாளத்தில் எழுதப்பட்டுள்ளது. இதில் சமஸ்கிருதம், தமிழ் மொழி சொற்கள் கலந்துள்ளன. இது வேநாடு, சேரநாடு, பாண்டிநாடு, துளநாடு பகுதிகளை சுட்டிக்காட்டுகிறது. இதனை ஆங்கிலத்தில் மோகன்குமார் மொழிபெயர்த்துள்ளார். ஹைதராபாத்திலுள்ள ஆசியன் அக்ரி கிஸ்டரி பவுண்டேசன் (Asian Agri - History Foundation) இதனை வெளியிட்டுள்ளது. இந்த கிருஷிகீதம் 4 பகுதிகளைக் கொண்டது.

முதல்பகுதி

– முதற்கடவுள் விஷ்ணுவை லக்ஷ்மியுடன் சேர்த்து நமஸ்கரிக்கிறேன். வழிவிடும் தெய்வம் விநாயகரை நமஸ்கரிக்கிறேன். குருவை நமஸ்கரிக்கிறேன்.

– ஓ பார்கவராமா ஜமத்கனியின் புதல்வரே கோடாரியை ஏந்தியுள்ளவரே பிருகு வம்சத்தில் பிறந்தவரே ரேணுகாதேவி பெற்றெடுத்த கருணைக்கடலே மகாதேவரின் சிறந்த சிஷ்யரே, கார்த்தவீரர்ஜுரனனை வென்றவரே, பூமி செழிக்கவந்த தெய்வமே, உங்களை துதிக்கின்றோம். ஏரளமான நிலங்களைத்தானமாகப் பெற்றுக்கொண்ட அந்தணர்கள் பரசுராமரிடம் சென்று வணங்கி நின்றனர். ''வேள்வி செய்யும் அந்தணர்களே உங்கள் வருகைக்கு காரணம் என்ன'' என்று பரசுராமர் கேட்டார். இதற்கு அவர்கள் வேளாண்மையில் எந்தெந்த பயிர், கிழங்குகளை எந்தந்த பருவத்தில் விதைப்பது, பராமரிப்பது பற்றி கேட்டனர். இதற்கு பரசுராமர் தன் குருவை வணங்கி பின்வருமாறு பதில் கூறினார். பல பாரம்பரிய பயிர் ரகங்கள் அழிந்து விட்டன. தற்சமயம் அசுர ரகங்கள் வந்துள்ளன. இது நோயை உண்டாக்கும். இந்த ரகங்கள் வேறு தேசங்களிலிருந்து வந்தவை. நெல்லில் பல்வேறு ரகங்கள் அந்தந்த இடங்களுக்கு ஏற்றவை . காமதாரா என்ற ரகத்தை யாவரும் சந்தோஷமாக பயிரிடலாம். முக்கினவேலுதா, கிரிகஷாலா ரகங்களை நம்பிக்கையுடன் விதைக்கலாம். குறுகிய காலத்தில் அறுவடைக்கு போனா செருவித் , தண்டன் ஆகியவற்றை விதைப்பதைத் தவிர்க்க. வெட்டுவேலிஇயரி,சுருனகரியான், வாழக்கண்ணன், வெள்ளச்சி நெல்லு ரகங்கள் நல்ல விளைச்சலை கொடுக்கும். பணக்காரர்கள் சம்பதாலன் என்ற ரகத்தை பயிரிடுவர். துளு பகுதியில் (வட கேரளத்தில்) இந்த ரகங்களை விதைக்கும் முன் முளைக்கட்டுவர். கொலநாடு (வடக்கு மலபார்) பகுதியில் கீழ் கண்ட நெல் ரகங்களை பயிரிடுவர். செந்நெல்லு , விருப்பு என்ற முதல் போகத்திற்கு ஏற்றது. கரிச்சநெல்லு மற்றும் குஞ்விதாநெல் ரகங்கள் வட்ட வடிவம் கொண்டவை. கொழிவலன் தாழ்வான பகுதிக்கு ஏற்றது. வெள்ளகொழிவலன் விதைத்தால் எந்த நோயும் அனுகாது. பன்னாரயன், கழமா ரகங்கள் சாப்பாட்டிற்கு ஏற்றது. முன்டகன் பருவத்தில் (இரண்டாம் போகம்) அரிகிராலி, பையநாடன் ரகங்கள், ஓர்திதியன், வள்ளி நல்ல மகசூல் தரும். பரம்பன் கழாமா, பூதன் ரகங்கள் மேட்டு நிலங்களுக்கு ஏற்றது. மோடன், சேருமோடன், நிகேதன் காட்டு நிலத்திற்கும் (வனத்தில்) மலயுடும்பன், கொடநெல்லு மலை பகுதிக்கும் (கொலநாடு) ஏற்றது. எடநாடு பகுதிக்கு கரிப்பலி, ஆர்யன், விருப்பு,கழமா, காளி ரகங்கள் ஏற்றது. புன்சநெல்லு எல்லா பருவத்திற்கும் ஏற்றது. குட்டநாடன் ரகம் 8 மாத பயிராகும். கேரளா பாரம்பரிய நெல் ரகங்களைப் பற்றிய விவரங்களுக்கு : Thanal . OD 3 Jawahar Nagar, Kawidiar Post , Trivandrum , 0471 - 2727150

(தொடரும்)